செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை

சிலம்பு-௫௧] வள்ளுவர் ஆண்டு ௨௦௦௭ ஆவணி, (Sep'76) [பரல்-௧

‘செந்தமிழ்ச் செல்வி’

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

க. டாக்டர் ந. சஞ்சீவி, எம். ஏ., பி.எச்டி.
தமிழ்த்துறைத்தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்

உ. ‘சித்தாந்த கலாநிதி’, உரைவேந்தர்,
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், மதுரை

ங. திரு. கொண்டல், சு. மகாதேவன் அவர்கள், எம். ஏ., பி. எஸ்வி.
இயக்குநர், தமிழகவரசு தமிழ் வளர்ச்சித்துறை.

ச. செஞ்சொற்கொண்டல், வித்துவான்,
டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., டிப். லிங்
அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.

ரு டாக்டர் எஸ். வி. சுப்பிரமணியம்,
இயக்குநர், உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம்
அடையாறு, சென்னை

சு புலவர் இரா. இளங்குமரன், திருநகர், மதுரை-6.


எ. திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.
நூலகர், மறைமலையடிகள் நூல்நிலையம், சென்னை.

நால்வர் கோயில் திருப்பணி—ஒரு வேண்டுகோள்

சைவமும் தமிழும் தழைத்தோங்கத் திருமுறைப் பாடல்களை அருளிச்செய்தோர் சமயகுரவர் நால்வர் ஆவர். சமயகுரவர்களுக்குத் திருக்கோயில் அமைக்கக் கருதிய மெய்யன்பர்களின் அரும்பெரும் முயற்சியால், வேதமலைப் பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கழுக்குன்றத்தில் நால்வர் கோயில் திருப்பணி நடைபெற்று வருகின்றது. இத் திருப்பணியில் மறைமலையடிகளாரின் மாணவர் தவத்திரு அழகரடிகள் பெரிதும் ஈடுபாடுகொண்டுள்ளார். திருப்பணி பாதி முடிந்துள்ளது. எஞ்சியுள்ள பகுதியை முடித்துத் திருக்குட முழுக்குக் காண ரூ. 10,000 வரை தேவைப்படுவதால் சைவ மெய்யன்பர்களும், சமயப்பற்றுளர்களும், செல்வர்களும், இத் திருப்பணி இனிது நிறைவேறத் தம்மால் இயன்ற பொருளுதவி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். நன்கொடை வழங்க விரும்புவோர் கீழ்க் காணும் முகவரிக்குப் பணம் அனுப்பிப் பற்றுச் சீட்டு பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

திரு N. தணிகாசலம், பொருளாளர்
33, குளத்துத் தெரு. நால்வர்கோயில் பேட்டை,
திருக்கழுக்குன்றம் (செங்கை மாவட்டம்)

Vol. LI (௫௧) 1976—77



செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

ஐம்பத்தோன்றாவது சிலம்பு

திருவள்ளுவர் ஆண்டு
௨௦௦௭—௨௦௦௮

The South India Saiva Siddhanta Works

 Publishing Society, Tinnevelly, Ltd.,

Madras-1 Tirunelveli-6. Madurai-1. Coimbatore-1,

Kumbakonam-1. Tiruchirappalli-2.

உள்ளுறை

———

படங்கள்

மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா கரு அ

நடுவண அரசு நிதி அமைச்சர் மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்கட்கு, தமிழக ஆளுநர் மாண்பமை மோகன்லால் சுகாதியா அவர்கள் டாக்டர் பட்டம் வழங்குதல். துணை வேந்தர் மதிப்புமிகு சை. வே. சிட்டிபாபு அவர்கள் உடனிருத்தல்.

மறைமலையடிகளார் நூற்றாண்டு விழா உகூச-கரு

1. தமிழகச் சட்டப்பேரவைத் தலைவர் மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன் அவர்கள் அடிகளார் நூற்றாண்டு விழாத் தலைமையுரை ஆற்றுதல். மேடையிலிருப்போர்: உயர் திரு. அரங்கபாஷியம் ஐ. ஏ. எஸ்., தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

2. தவத்திரு குன்றக்குடி அடிகளார், மறைமலையடிகளார் தொண்டர்களைப் பாராட்டிப் பேசுதல். உயர்திரு அரங்கபாஷியம் ஐ.ஏ.எஸ்., தாமரைச் செல்வர், வ. சு., உயர்நீதிமன்ற நடுவர் மாண்பமை எஸ். மோகன் அவர்கள்.

3. மறைமலையடிகளார் தொண்டர்களான தவத்திரு அழகரடிகள், மறை திருநாவுக்கரசு, ந. ரா. முருகவேள், கோவை இளஞ்சேரன், சிறுவை நச்சினார்க் கினியன் ஆகியோர்க்குத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தல்.

3. கல்வித்துறைச் செயலர் உயர் திரு சி. ஜி. அரங்கபாஷியம் ஐ. ஏ. எஸ். அவர்கள் மறைமலையடிகளார் நூற்றாண்டு விழா மலரை வெளியிட அதனை முன்னாள் உயர்நீதி மன்ற நடுவர் உயர்திரு. எஸ். மகராசன் அவர்கள் பெறுதல். கழகப் பொது மேலாளர் திரு. இரா. கலியாணசுந்தரம் அவர்களும் படத்தில் காணப்படுகிறார். உஎஉ

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ருக	திருவள்ளுவர் ஆண்டு உ००எ, ஆவணி செப்டம்பர் 1976	பரல் ௧

மறைமலையடிகள் எழுதி அச்சிட்டு முடிக்காத இரு பெரு நூல்கள்

தெய்வப் புலமைத் திருவள்ளுவர் அருளிய உலகப் பொது மறையாந் திருக்குறள் ஆராய்ச்சியும் திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்ட தேவர் அருளிய தனித்தமிழ் விழுமிய நூலாஞ் சிவஞான போத ஆராய்ச்சியும் அடிகளார் முடிக்காத இருபெரு நூல்கள் ஆகும்.

அடிகளார் தாம் எழுதும் நூல்களை முதற்கண் தமது ஞான சாகரம் என்னும் அறிவுக்கடல் இதழில் பகுதி பகுதியாக வெளியிட்டு முடிப்பது வழக்கம்.

அந்த முறையில் 1904 ஆம் ஆண்டு சூலைத் திங்களில் மெய்கண்டதேவர் இயற்றியருளிய ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதான முப்பொருள் உண்மைகளை முழுதுணர்த்தும் 40 வரிகளையுடைய பன்னிரு நூற்பாக்களைக் கொண்ட ‘சிவஞான போதம்’ என்னும் மெய்ச்சமய முதல்நூலை ஆய்ந்து ஆராய்ச்சியுரை எழுதி 1904 சூலைத் திங்கள் அறிவுக்கடல் 2 ஆம் தொகுதி 4 ஆம் இதழில் வெளியிடத் தொடங்கினர். 1922 செப்டம்பரில் வெளிவந்த அறிவுக்கடல் 10 ஆம் தொகுதி 4, 5 ஆம் பகுதிகள் வரை, அது வெளியிடப் பெற்று அரைகுறையில் நின்று விட்டது.

அதே முறையில் அவர்கள் எழுத முற்பட்ட திருக்குறள் ஆராய்ச்சி யுரையினை 1904 செப்டம்பர்த் திங்கள் அறிவுக்கடல் 2 ஆம் தொகுதி 6 ஆம் பகுதியில் வெளியிடத் தொடங்கினர். 1906 சூலைத் திங்கள் 3 ஆம் தொகுதி 7 ஆம் பகுதிவரை அது

வெளியிடப்பெற்று அரைகுறையில் நின்றுவிட்டது. இவ்விரண்டும் அடிகளாரால் முடிக்கப்பெருமல் நின்றுபோனது தமிழ் மக்கள் செய்த தவக்குறைவேயாகும்.

இவ்விரண்டு ஆராய்ச்சி நூல்களும் அரைகுறையாக நின்றுவிட்டதற்குரிய காரணம் யாதென ஆராய்ந்தேன். அதற்குக் காரணம் 'மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்' என்னும் மிகவும் விரிந்ததோர் ஆராய்ச்சி நூலே எழுதுவதில் அடிகள் ஈடுபாடு கொண்டமையேயாகும். அது 1930 பிப்ரவரித் திங்களில் 1080 பக்க அளவில் முடிவு பெற்றது. அது முற்றுப்பெற்ற பின்னர் சைவசமயத்துக்கு எதிர்ப்பான சில இயக்கங்கள் தமிழ்நாட்டில் தோன்றவே அடிகளார் 'பழந் தமிழ்க் கொள்கையே சைவ சமயம்', 'கடவுள் நிலைக்கு மாருன கொள்கைகள் சைவமாகா' 'தமிழர் மதம்' போன்ற சில நூல்களை எழுதி வெளியிடுவாராயினர்.

அடிகளாருடைய மதிப்புமிக்க நன்மாணுக்கர் மாம்பாக்கம் குருகுலத் தலைவர் தவத்திரு அழகரடிகளுக்கு யான் 29—1—76 இல் எழுதிய கடிதமும் அவர்கள் அதற்கு 2—2—76 இல் எழுதிய மறுமொழியும் செல்வி 50 ஆம் சிலம்பு 6 ஆம் பரலில் வெளியிடப் பெற்றுள்ளன. அவற்றிற் கண்டபடி அடிகளார் வரலாற்று மாட்சியினை 50 ஆம் சிலம்பில் எழுதி முடித்த பின்னர் அழகரடிகள் எழுதும் சிவஞான போத ஆராய்ச்சி இப் பரலின்கண் தொடங்கப் பெறுகின்றது. இதனை மிகவும் விளக்கமாகவும் விரிவாகவும் எழுதுமாறும் செல்வி 52 ஆம் சிலம்பிலும் தொடர்ந்து வெளிவரக் கூடியதாக இருக்கட்டும் என்றும் அவர்கட்கு எனது விருப்பத்தை எழுதித் தெரிவித்துள்ளேன்.

தம் ஆசிரியப் பெருந்தகையார் எழுதி முடிக்காமல்விட்ட இருபெரு தெய்வத் திருவருள் நூல்களையும் தாம் எழுத ஒப்புக் கொண்டு எழுதி வருவது தமிழ் மக்கள் செய்த தவப் பேறே யாகும் என்று மகிழ்வோம்.

50 ஆம் சிலம்பில் அழகரடிகள் எழுதி முடித்த தம் தவப் பேராசிரியரது வரலாற்று மாட்சியிற் சேர்க்கவேண்டிய சில குறிப்புக்களைச் சேர்த்துச் செப்பஞ் செய்து அதனைத் தனி நூலாக வெளியிடுதற்குத் தந்துள்ளமையினை இங்கே மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுக்றேன். மேலும் தவத்திரு அழகரடிகள் மெய்கண்ட சாத்திரம் பதினுன்கிற்கும் உரைநடை எழுதி முடித்து அச்சிடுவதற்குத் தந்துள்ளனர். அதுவும் அச்சிடப்பெற்றுத் தனி நூலாக விரைவிலே வெளியிடப்பெறும்.

வ. சு.

*சிவஞானபோத ஆராய்ச்சி

[தவத்திரு அழகரடிகள்]

'சிவஞானபோத ஆராய்ச்சி' செய்ய நாம் இங்கே கூடி யிருக்கிறோம். இக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்த தாய்மார் களுக்கும் பெரியோர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளு வதுடன், சிவஞான போத உண்மைகளை அறிவாராய்ச்சிக்குப் பொருந்தத் தெளிவித்த எம் ஆசிரியர் அடிகளார்க்கும் வணக்கம் செலுத்திக் கொள்கிறோம். ஆராய்ச்சி செய்யும் நாளெல்லாம் நமக்கு நல்ல நாட்கள்; 'பாயிரம்' 'கடவுள் வணக்கம்' 'அவை யடக்கம்' என்னும் செய்யுட்களை முதலில் பார்த்துக் கொண்டு பின்பு நூலின் முதல் நூற்பாவை ஆராய்வோம்.

I

பாயிரம் :

மெய்யன்பர்களே! பாயிரத்தில் ஒரே செய்யுள் தான் உண்டு. அதனை இயற்றியவர் யாரென்று தெரியவில்லை. நூலின் பழைய உரையிலும் குறிப்பில்லை. அடுத்து அமைந்த, பாண்டிப் பெருமாள் விருத்தியில், அருணந்தி சிவனார் இப் பாயிரச் செய்யுளை இயற்றினார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அருணந்திசிவனார் மெய்கண்டார் மாணவர்; 'சிவஞான சித்தியார்' என்னும் நூலை அருளிச்செய்த ஆசிரியர்.

ஆயினும், 'சிவஞான சித்தி'யாரின் பரபக்கத்தில் 'நந்தி அருள் பெற்றவர் சனற்குமாரர்' என்று அருணந்திசிவம் கூறு கிறார்; 'சுபக்கத்'தில், மெய்கண்ட தேவர்தாம் தம்மை ஆட் கொண்ட ஆசிரியர் என்று சொல்லுகிறார். இப் பாயிரச் செய்யுளில், சனற்குமாரர் பெயர் வெளிப்படையாய் வரவில்லை. ஆதலால், இப் பாயிரச் செய்யுள் செய்தவர் யார் என்பது திட்ட மாய்த் தெரிய வகையில்லை.

செய்யுள் அருமையாய் உள்ளது; மேலும், சிவஞான முனிவரும் அதற்கு உரை எழுதியிருக்கிறார்.

'ஞாயிறு இருளை நீக்குகிறது, கண் பார்க்கிறது. அது போலக் கடவுள் அறியாமையை நீக்குகிறார்; ஆன்மா தெரிந்து

---

*15ஆண்டுகளுக்கு முன், சிவகாசியில், வார வழிபாட்டுக் கழகத்தில், 12 நாட்கள் அன்றாடம் செய்த விரிவுரைகள்; இவை விரிவுரைகளாய் நிகழ்ந்தவை; எங்கும் பரவும் பொருட்டு எல்லார்க்கும் விளக்கமாய்த் தெரியவும் வேண்டும்; ஆதலால், கூடிய வரையில் எளிய நடையில் எழுத வேண்டுமென்பதே விழைவாயிருக்கிறது.

கொள்ள வேண்டியவற்றைத் தெரிந்து கொள்ளுகிறது' என்று ஓர் உவமை முதலில் வருகிறது. கடவுள் என்பது இங்கே 'கடவுள் ஞானத்தை' அதாவது 'சிவஞானத்தை' உணர்த்தும்.

கடவுளைக் கூறும்போது, 'பெரும்பெயர்க் கடவுள்' என்று கூறப்படுகிறது. ''நந்தி நாமம் நமசிவாயவே'' என்று கடவுளுக்குத் திருவைந்தெழுத்தைத் திருஞானசம்பந்தர் பெரிய பெயராகக் கூறுகிறார். 'ஓங்காரம்' 'பிரம்ம மந்திரம்' 'திருவைந்தெழுத்து' 'பிராசாத மந்திரம்' என்பனவெல்லாம் திருவைந்தெழுத்தின் வகைகளே! ஆதலால், அகப்பூசனையின் அருச்சனைக்கும், ஓமத்துக்கும், தேனிப்புக்கும் திருவைந்தெழுத்து மந்திரமே உரியதென்று சிவஞான போதத்தில் ஒன்பதாம் நூற்பாவில் விளக்கப்படுகிறது.

''அந்தம் ஆதிகள் இலாத அஞ்செழுத்து''

(நூற். 10, செய். 11)

என்பது சிவப்பிரகாசம்.

சேக்கிழாரடிகள், திருஞான சம்பந்தர் புராணத்தில், திருவைந்தெழுத்தை 'ஆதி மந்திரம்' என்று அருளிச் செய்கின்றார்.

''முந்தைமுதல் மந்திரங்க ளெல்லாம் தோன்றும்
முதலாகும், முதல்வனார் எழுத்தைஞ்சு என்பார்''

(திருஞானசம். செய். 266)

நமக்குக் காணக் கூடியபடி அணுக்கமாகக் கிடைத்திருப்பது உடம்பாகிய பிண்டம்; அண்டத்திலிருந்து பிண்டுவந்ததனால், உடம்புக்குப் பிண்டம் என்று பெயர் வந்தது; உலகத்தை எண்ணிப் பார்க்க முடியாவிட்டாலும் உடம்பை எண்ணிப் பார்ப்பது சிந்தனையாளர்க்கு முடியும். உடம்பில் அறிவு நிகழ்வது. தெரிகிறது; அறிவு ஒரு பண்பு; பண்பு தனியாக இராது; அதனையுடைய உயிர் ஒன்று உடம்பில் இருக்கவேண்டும். உடம்பின் வியக்கத்தக்க அமைப்பைச் செய்ய அறியாமைப் பொருள்களால் இயலாது; சிற்றறிவுள்ள உயிர்களாலும் இயலாது; மிகச் சிறந்த பேரறிவுப் பொருளாலேதான் இயலும்; அது, அறியாமைப் பொருள்களிற் கலந்திருப்பதை விட அறிவுப் பொருள்களாகிய உயிரில், அதுவும் உயிர்களின் அறிவில், உயிர்க்குயிராய்க் கலந்துகொண்டிருக்க வேண்டும். இங்ஙனம் உடலமைப்பைக் கொண்டு உயிரையும் உயிர்க்குயிராய கடவுளியல்பையும் நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

அவ்வுண்மை தோன்ற, 'பெரும் பெயர்க் கடவுள்' என்று சிவஞான போதப் பாயிரச் செய்யுளில் வந்தமை, சிறப்பு!

'சிவஞானம்' என்னும் ஞானத்தால் உடம்பின் பகுதிகளைக் கொண்டு 'உயிர்' 'உயிர்க்குயிர்' என்பவை தெளிந்து, மயக்கம் தீரும் வகையில், இந் நூல் இயற்றப்பட்டிருக்கிறது.

'நந்தி பெருமான் முனிவர் கூட்டத்துக்குச் சிவஞான போத உண்மைகளை அறிவித்தார்' என்னும் குறிப்பு, பாயிரச் செய்யுளில் வருகின்றது. சரியை ஞானம், கிரியை ஞானம், யோக ஞானம், ஞான ஞானம் என்னும் நால்வகை ஞானங்களிலும் உயர்ந்தது 'ஞான ஞானம்' என்னும் சிவஞானமாகும். ஆதலால், 'உயர் சிவஞான போதம்' என்று பாயிரச் செய்யுள் கூறும். 'பாச ஞானம்' 'பசு ஞானங்'களை விடச் 'சிவஞானம்' உயர்ந்தது; 'ஞான ஞானம்' என்றதும் அது! உயர் 'சிவஞான போதம்' என்றது, பொருத்தந்தான்!

போதிக்கப்படுவது போதம்; உறுதியும் தெளிவும் உடையது போதம்; போதிக்கும் வகை சிவஞானமாதலால், ஞானுசிரியரின் தீக்கையினுலேதான் போதிக்க முடியும். ஏனென்ருல், போதிப்ப தென்பது சிவஞானம்; வெறுங்கருத்தன்று; சிவவொளியாகிய அனுணர்வு; அதில் திளைப்புடைய ஞானகுரு, மாணுக்கர்க்கு அவ்வொளியைத் தீக்கையினுல் கூட்டுவார்; அது, வாய்ப் பேச்சினுல் மட்டும் இயலுவதன்று. கல்லால நீழலின்கீழ் நந்திக்கு அச் சிவவொளி கிடைத்தது; அவர்வழிப் பிறர்க்குங் கிடைத்தது; மெய்கண்ட தேவர் அவ்வொளி பெற்று அதனை நூல் வடிவாக்கினர்; நூல் செய்த முதன்மை மெய்கண்டார்க்கிருந்த மையால், அவர் பெயரால் 'மெய்கண்ட சந்தானம்' ஏற்பட்டது.

புருட தத்துவத்துக்கு 'உயிர்' என்றும், 'உள்ளம்' என்றும், 'தற்போதம்' என்றும் பெயருண்டு. இங்கே கூறப்படுவது தற் போதமன்று, ஞான போதம்; அதுவும் சிவஞான போதம்; 'தற் போதம்' என்பது யான் எனது என்னும் அகப்புறப் பற்றுக் களோடு கூடியது. அவற்றை நீக்கி, அவ்வுள்ளத்தில் ஆசிரியர், தாம் பெற்ற சிவஞான ஒளியைத் தெளிவாகப் பதியவைப்பது தீக்கையினுலேதான் முடியும். அத்தகைய தீக்கையையே நந்தி பெருமான் முனி கணத்துக்கு உதவி, சிவஞானத் தெளிவை எழுதா மறையாக அறிவுரை செய்தார்.

அதை எழுதும் மறையாக, 'மேற்கோள்' 'ஏது' 'எடுத்துக் காட்டு'களுடன், மெய்கண்ட தேவர், தமக்குத் தம் ஆசிரியர் அருளிச் செய்தபடி, சிந்தித்து உரைத்தார். ஆதலால், 'உரைத் தோன்' என்று பாயிரத்தில் வருகின்றது.

சிந்தித்து உரைக்க வேண்டியதற்குக் காரணம் உண்டு; தமக்குமுன் தமிழகத்தில் திருக்குறள் மறையாலும் சங்க நூல்களாலும், சமய நூல்களாலும் வழி வழி வந்த, 'உலகம்' 'உயிர்' 'கடவுள்' என்னும் முப்பொருள் உண்மை ஆய்வுகள், முறைமைகள், பல இருக்குமல்லவா? அவற்றிற்கெல்லாம் வரிவடிவில் தனி நூல் இல்லை. மெய்கண்டார் சிந்தித்துத் தொகுத்தும் மெய்கண்டும் உரைக்க வேண்டியதாயிற்று.

மக்கள் சில வாழ்நாள் உடையவர்; சுருக்கமாக அவர்களுக்கு நூல் வேண்டும்; விளக்கமாகவும் அதைக் கொண்டே கருத்துக்களை அறிந்துகொள்ள வேண்டும்; முக்கியமான ஞானக் கருத்தாதலால் அத்தகைய நூல் ஒன்று உலகுக்குக் கட்டாயமாயிற்று. தமிழ் மொழிக்கு அங்ஙனம் சுருக்கி விளக்கும் ஆற்றல் உண்டு; தமிழ் மொழி அழகுகளில் இவ்வாற்றலே முதன்மையான அழகு என்று இலக்கண ஆசிரியன்மார் கூறுவர்!

நெடுங்காலத்துக்குமுன் அங்ஙனம் சுருக்க விளக்கமாய் இயற்றப்பட்ட மறை நூல் திருக்குறள்; அது, 'பொது மறை' என்னும் உலகியற்கைப் போக்கில் இயற்றப்பட்டது. சிறப்பு வகையாக ஞான இயற்கைப் போக்கில் ஒரு சுருங்கிய நூல் இருப்பதும் நல்லது என்று மெய்கண்டதேவர் கருதினர்.

உலகியற்கையைவிட ஞான இயற்கை மிக நுட்பமானது; ஆதலால் அதற்குரிய நூல் சுருங்கியதாகவே இருக்கும்; மேலும், புற விரிவிலிருந்து அக நுட்பத்துக்குச் செல்லும் ஞான உண்மைகளின் செயல்முறை மிகவும் சுருக்கமுடையது; ஆழ்ந்து ஆழ்ந்து மிகச் சுருங்கிச் செல்லுதலே அதன் இயல்பாதலால், பன்னிரண்டே நூற்பாக்களில் 'சிவஞானபோதம்' என்னும் வரிவடிவு நூல் அவரால் இயற்றப்பட்டது. எல்லாம் தனித் தமிழில் உள்ளன; எங்கோ இரண்டொரு சொற்களே பிற மொழியா யிருக்கின்றன; மிகச் சுருங்கிய நூலாதலால், 'மேற்கோள்' 'ஏது' 'எடுத்துக்காட்டு'களால் தாமே விளக்கமும் கொடுத்திருக்கிறார். எல்லாவற்றையும் நாம் இந்த நல்ல நாட்களில் பார்ப்போம்.

அங்ஙனம் சிவஞானபோதம் உரைத்தவர், திருவெண்ணெய் நல்லூரைச் சேர்ந்த 'திருவெண்காடர்.' திருவெண்காடன் என்பது பிள்ளைமைப் பெயர், 'மெய்கண்ட தேவர்.' என்பது சிறப்புப் பெயர்; அவர் அக் காலத் தவத்தோர் பலர்க்கும் தலைமையாய் மதிப்புடன் விளங்கினர்; 'தலைமையோன்' என்னும் மதிப்புப் பெயரும் பெற்றார். பாயிரத்தில் இச் செய்திகள்

வருகின்றன. மெய்கண்ட தேவர் திருவெண்ணெய் நல்லூரில் பிறந்தவர்; இருந்தவர்; அதனால் அவர் "வெண்ணெய்ச் சுவேதவனன்" என்று பாயிரத்திலும், "வெண்ணெய் மேவு மெய்கண்ட தேவன்" எனச் சிவஞான சித்தியாரிலும் கூறப் பட்டார்.

திருவெண்காடு சென்று பெற்றோர் நோன்பிருந்து பெறப் பட்டவராதலால், திருவெண்காட்டு இறைவன் நினைவாகத் 'திருவெண்காடன்' எனப் பிள்ளைமைப் பெயர் அமைந்து, அதனைச் 'சுவேதவனன்' என்று சமக்கிருதப் பெயராக்கியும் சிலர் அழைத்தனர்.

சிறப்புப் பெயரில், 'பொய் கண்டகன்ற மெய்கண்ட தேவன்' என்று வருகின்ற குறிப்புக் கருதத் தக்கது.

> "பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித
> மெய்கண்ட தேவன்அருள் மேவுநாள் எந்நாளோ"

என்று தாயுமானர் விளக்குதலால், 'அத்துவித' உண்மைதான் இங்கே 'மெய்' எனப்பட்டது என்று தெரிகிறது; 'பொய் கண்டாரின் பொய் கண்டு அகன்ற அத்துவித மெய்கண்ட தேவன்' என்னும் சிறப்புப் பெயரே, பின்பு, அவர்க்கு நிலைத்து விட்டது. சிறப்புப் பெயர் சில இவ்வாறு தமிழகத்தில் நிலை பெற்றிருக்கின்றன; மிக்க கல்வியாற் பெற்ற சிறப்புப் பெயராக 'அடை நெடுங் கல்வியார்' எனவும், யானைத் தலையை 'இரும் பிடர்த் தலை' எனச் சிறப்பித்தமையால் 'இரும்பிடர்த் தலையார்' எனவும், ஓர் ஏர் உழவனை உவமை கூறினமையால் 'ஒரேருழவர்' எனவும், வியக்கத் தக்க கருத்துகளை வெளியிட்ட காரணத்தால் 'பெருஞ்சித்திரனர்' எனவும் புறநானூற்றிற் பல சிறப்புப் பெயர்கள் வந்துள்ளன; சிலர்க்குத் தீக்கைப் பெயராகச் சிறப் புப் பெயர் அமைதலும் உண்டு.

II

அடுத்தவையாகக், 'கடவுள் வணக்கச்' செய்யுள், 'அவை யடக்கச்' செய்யுள் இரண்டும் வருகின்றன; இவ் விரண்டையும் ஆசிரியர் மெய்கண்ட தேவரே அருளிச் செய்தாரென்று நூல் களிற் குறிப்பு வருகின்றது. (சித்தாந்த சாத்திரம், பக். 6 அடிக் குறிப்பு)

கடவுள் வணக்கம்:

கல்லால் நிழலில் மலைவு இல்லாதவராகிய பெருமான் சீகண்ட உருத்திரரே! ஆதலால், நந்தி பெருமான் அவர்

அருளால் 'சிவஞானபோத' உண்மைகளைப் பெற்றார் என்பது தெளியப்படும். மலைவு இல்லாதவரே சிவஞான போதத்தை அருளிச் செய்ய முடியும். சீகண்டதேவர், அத்தகையவர்! நந்தி பெருமான் முனி கணங்கள் முதலான உலக மக்களுக்குக் குரு; ஆதலால், பாயிரச் செய்யுளில், 'நந்தி முனிகணத்தளித்த' என வந்தது; சிவஞான சித்தியார் பரபக்கத்தில் 'இறைவன் அருள் நந்தி தனக்கு இயம்ப' என 'அருணந்தி சிவனார்' அருளிச் செய்யவும் வாய்ப்பாயிற்று.

கல்லால் நிழலில் பெருமான் மலைவு இல்லாதவராய்ச், சிவஞான உண்மைகளை அருளிச் செய்தாரென்று மெய்கண்ட தேவர் கூறுவதனால், இரண்டு உண்மைகள் தெளியப் படுகின்றன. ஒன்று, நூல்களின் உட்பொருளாகிய 'அறம் பொருள் இன்பம் வீடு' என்னும் உறுதி நெறியில் மேன் மேலும் உறுதி வேண்டும் என்பது. இரண்டு; 'சிவஞான போதம்' சிக்கல்களைத் தீர்த்துத் தெளிவு தருவதாதலின், அதனைப் பெறுவதற்கு அறிவுத் தெளிவு வேண்டும் என்பது.

ஆலமரம் எல்லார்க்கும் நிழல் தரும்; தெய்வம் போல அனைவர்க்கும் பொதுவாகவும் பெரிதாகவும் குளிர்ச்சியாகவும், விழுதுவிட்டுப் பரவி நிற்கக்கூடியது. அறம் பொருள் இன்பம் வீடு என்பதோ, மறை உணர்வு. அந்த ஆலமரம் 'உறுதி' என்னும் கருத்தமைந்த 'கல்' என்னும் அடைமொழியைப் பெற்றுக் 'கல்லால மர'மாய் இருப்பதனால், அறம் முதலிய இந் நாற் பொருளும் வாழ்க்கைக்கு உறுதியானவை என்பதை முதலில் அறிந்து தெளிந்திருக்க வேண்டும் என்று தெரிகின்றது.

கல்லால நிழலில் இருந்து மலைவு இல்லாதவராய், ஞானகுரு என எழுந்தருளியவர் தென்முகக் கடவுளாகிய சிவபெருமான்! இந்தியா இமயந்தொட்டுக் குமரி வரையில் பண்டு தமிழகம் ஆதலின், இமயக் கயிலையின் ஆல் நிழலில் அவர் தெற்கு நோக்கி எழுந்தருளித் தென்முகக் கடவுளானார். அவர் அருளிச் செய்தது, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள்கள்!

இதைத் திருஞான சம்பந்தப் பெருமான் தமது முதுமலைத் தேவாரத்தில்,

'அறம் பொருள் இன்பம் வீடு மொழிந்த வாயான்'

(சம். திருமுது.)

என்று அருளிச் செய்தார்.

'மொழிந்த' என்பது இங்கே 'விளக்கிய' என்னும் பொருட்டு; அவ் விளக்கந்தான் சிவஞானம்; சிவஞான போதம்; சிவஞான போதத்தில் வரும் கருத்துக்களும் அறம் பொருள் இன்பம் வீடு என்பனவே; பிழிந்தால், இந் நான்கு பொருள் களும் கிடைக்கும்; உறுதிப் பொருள்கள் என்று அவை கூறப் படுவதிலிருந்து இது தெரிகிறது;

> "கற்ற நூற் கருத்துநீ அருத்தம் இன்பம் என்றிவை
> முற்றுநீ புகழ்ந்துமுன் உரைப்பதென் முகம்மனே"
>
> (ஞானசம். ஆலவாய். 3)

என்பதும் திருஞானசம்பந்தர் வாய்மொழியாகும்.

> "நன்றாக நால்வர்க்கு நான்மறையின் உட்பொருளை
> அன்றாலின் கீழிருந்தாங் கறமுரைத்தான் காணேடி"
>
> (திருவாசக, திருச்சா. 16)

என்று மாணிக்கவாசகரும் திருவாய் மலர்ந்தார். அறம் பொருள் இன்பம் வீடு என்பவை மறைநூலின் உட்பொருள்கள் என்பதும் இதனால் விளக்கமாகும்.

முதுமொழி நூலாகிய திருக்குறள் மறைக்குச், 'சிவஞான போதம்', பின்னுஞ் சுருங்கத் திரட்டிய ஒரு ஞானப் பனுவலாகும். ஆதலால், திருக்குறள் மறை நூலாகவும் சிவஞானபோதம் முதலிய மெய்கண்ட நூல்கள் 'பொருளுணர்த்தும் ஆகமம்' ஆகவும் விளங்குகின்றன. 'ஆகமம்' என்பது முப்பொருள் உணர்த்தும் நூல்கள்; "ஓது சமயங்கள் பொருளுணரு நூல்கள்" என்பார் அருணந்தியார். "வேத நூல் சைவ நூல் என் றிரண்டே நூல்கள்" என்று மேலும் அவர் உரைப்பார்; 'பொரு ளுணர்த்தும் நூல்களை' அவர் 'சைவ நூல்' என்று பாராட்டினமை யால், உலகம், உயிர் கடவுள் என்னும் மூன்று பொருள்களைச் 'சைவ நூல்' என்பனவே செவ்வையாய் உணர்த்தும் என்பதுந் தெரிகின்றது.

திருக்குறளையும் தேவாரத்தையும் 'தமிழ் மறை' என்பது புதிதன்று. திருக்குறள் பொது மறை நூல்; தேவாரம் சிறப்பு மறை நூல்! அவற்றின் பொருளுணர்த்து நூல்கள் மெய்கண்ட நூல்களாயிருக்கின்றன.

'வேதம் பசு' என்னும் பாடலில், முதல் வரிகளில் வரும் வேதமும் ஆகமமும் பொது நிலை; மற்றவை, சிறப்பு மறையும் ஆகமமுமாகும். மற்றவை என்பன, நால்வர் ஓதுந் தமிழும்,

அதன் சுவையாகிய மெய்கண்ட சிவஞான போதம் முதலியனவு மாகும். தமிழ் மக்களுக்குத் தமிழ் மொழியிலிருக்கும் தமிழ் மறைகளும் தமிழிற் பொருளுணர்த்து நூல்களும் முதன்மை!

நந்தி பெருமானுக்குத் தென்முகக் கடவுள் என்னும் சிவ பெருமான் இவ் விளக்கத்தை அளித்தாராதலின், அவர், மேன் மேல் அருள்கூரும் பொருட்டு, 'அப் பொல்லார் இணைமலரை நல்லார் புனைவர்' என்று, மெய்கண்ட தேவர் கூறுகின்றார். தாம் அதனிலும் பற்றின்றி நல்லார் மேல்வைத்து அருளிச் செய்தார். ஆராய்பவருக்கு, மேலும் அருள் செய்யும் பொருட்டு என்னுங் கருத்தில் 'அருளிய' என்னும் சொல் வருவதனால், 'பொல்லார்' என்பதும் அருள் செய்யும் அச் சிவபெருமானையே குறிக்கும்;

இங்கே, 'பொல்லார்' என்பது, 'பிறரால் உருவத்தில் பொளியப்படாத இயற்கையான தென்முகக் கடவுள் என்று கருத்தாகக் கூடும். மெய்கண்ட தேவர் கூறியது, சிவபெருமான் வணக்கம் என்பது இதனாற் பெறப்படும். தமிழ்வேத நூல்களின் கருத்தும் இதுவே!

திருஞானசம்பந்தர் முதலிய சமய குரவர் நால்வருங்கூட, 'பிள்ளையார்', 'முருகர்' முதலியவர்களை தனிப் படுத்திப் பாடுவதில்லை; பிரியாத அம்மையைக்கூட, நால்வர், தனித்துப் பாடுவதில்லை; தேவார திருவாசகங்களும் மெய்கண்டார் சிவஞான போதமும் இம் முறையில் ஒத்துச் செல்கின்றன. 'இணை மலர்' என்று இரண்டு திருவடிகளை மெய்கண்டார் குறிப்பதனால், அம்மையப்பரின் இணைவை, அந்த இரண்டு திருவடிகளும் புலப் படுத்துதல் அறியலாம்; 'ஞான சத்தி' கிரியை சத்தி' என் பனவும் இக் கருத்துடையனவே! நல்லார், என்பதற்குக் "கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த மெய்யன்பர்" என்று சிவஞான முனிவர் கருத்துரைப்பது பாராட்டுதற்குரியது.

'மலர்' என்பதற்கு ஏற்பப் 'புனைதல்' என்பது வந்தது; அப்படிப் புனைவது தலையிலே யாதலால், 'தாடலை போல்' (இரண்டற) அடங்கி நிற்பர் என அவர் உரைப்பதும் சிறப்பாய் உள்ளது.

இதனாலும் மெய்கண்ட தேவரின் பற்றின்மை விளங்கு கிறது; சிவஞான போதத்தால், 'தாடலை' போல் இறைவனோடு இரண்டறக் கலக்கும் வீடுபேறும் பெற வாய்ப்புண்டு என்னும் உண்மைநிலையும் கூடிவருகிறது. 'சிவஞானம் போதம்' அறி

வாராய்ச்சி முறையிற் பிறர்க்காகக் கூறப்பட்டாலும், சிறப்பு நிலையை அமைவிக்கவும் அதனுல் இயலுமென்று தெரிகின்றது. 'சிறப்புப் பகுதி' என்று அதன் பிற்பகுதி பிரிக்கப்பட்டிருப்பதே, பக்குவர்க்கு அத் திளைப்பு நிலையை உதவும் என்பதைக் காட்டுகிறது !

III

அவை யடக்கம் :

அன்பர்களே, அவையடக்கச் செய்யுளைச் சிறிது காண லாம்.

இறைவனை உணர்வோர் தம் இயல்பையும் தெரிந்தவராய் இருப்பாராம். அவர், 'பொது நிலை' என்னும் 'அருள் இயல்பை' வாய்ந்தவராய், அதனுல் தம்மையும் உரிமை கொண்டவராய் இருப்பார் என்று மெய்கண்ட தேவர் கருதி, அப்படி இருப் பதனுல், 'எம்மை அவர் அன்புசெய்து ஆட்கொள்வரேயன்றி இகழ மாட்டார்' என்று உளங்கொண்டு அடக்கம் தெரிவித்துக் கொள்கிருர். அறிவு அகன்று புலம் அவிந்த சான்ருேர்களாய்ப் பெரியவர்கள் இருப்பதனுல், அவர்கள் இருக்கும் கூட்டம், 'அவை' என்று பெயர் பெற்றது. ஆன்று அவிதலோடு அருளிலும் அடங்கியவர் ஆதலால், "ஆன்று அவிந்து அடங்கிய சான்ருேர்" என்றும் அத்தகையோர் அழைக்கப்படுகின்றனர் ; அவ் வருட் பெரியோரின் உடைமையாக மெய்கண்ட தேவர், அவர்பால் அடங்கி ஈடுபடுதலால், இச் செய்யுள் அவையடக்கச் செய்யுளாயிற்று. இச் செய்யுளின் முதல் இரண்டு வரிகள் இவ் வுண்மைகளை உணர்த்துகின்றன.

சான்ருேர் அல்லாத ஏனையோர், தம் இயல்புகளையும் உணராதவர்கள்; அதனுல், முதல்வன் இயல்புகளையும் அவர்கள் உணர வாய்ப்பில்லை; ஆதலால், தமக்குள்ளேயே அவர்கள் ஒருமைப்பாடு இல்லாதவராவார்; இதனுல் அன்பு செய்யும் 'பொது நிலைமை' அவர்களுக்கு அமைவதில்லை; அதுகொண்டு, எம்மிடமும் அவர் அன்பு செய்ய மாட்டார், இகழ்வர், புறம் பழிப்பர் என்று அறிந்துகொள்ளலாம். அத்தகைய புறங்கூற்று மொழிகளில் நாம் சிந்தை வைப்பது, பெரியோர் நிலையில் ஈடு படுவதற்கு ஊருய் முடியும்; அப் புற மொழிகளை ஒரு பொருளாகக் கேட்டுக் கொண்டிருக்க மாட்டோம் என்று, பின் இருவரிகளில், மெய்கண்ட தேவர் கூறுகிருர். இதனுலும் அவர் பெருந் தன்மை இனிது விளங்குகிறது.

இந்தப் பின் வரிகள், வேறு இரண்டு உண்மைகளையும் நமக்கு விளக்குகின்றன. ஒன்று; தம் சிறுமைகளை உணராதவர் இறைவன் பெருமைகளை உணரமுடியாது என்பது;

இறைவன் பெருமைகளில் எல்லார்க்கும் அன்பு செய்தல் என்னும் பொது நிலையும், பக்குவ நிலையில் எல்லார்க்கும் சிறப்பாக அருள் செய்தல் என்னும் தனி நிலையும் அடங்கும்; தெய்வம் உணராதவர்கள், தமக்குள்ளும் ஒருவருக்கொருவர் அன்பு செய்தல் இல்லாமல் கலாம் விளைத்துக் கொண்டு கெடுவர்.

"ஈசனுக்கு அன்பில்லார், அடியவர்க்கு அன்பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார்; தமக்கும் அன்பில்லார்;
பேசுவதென் அறிவிலாப் பிணங்களை நாம் இணங்கில்,
பிறப்பினிலும் இறப்பினிலும் பிணங்குவர் விடு நீ;"
(சித்தியார், நூற். 12, செய். 2)

என்பார் அருணந்தியார்.

ஆதலால், மற்றவர் மேல் அன்பு செய்வார் என்பதை நாம் எதிர்பார்க்க முடியாது; புறம் பேசுவார் என்பது உறுதி;

மற்றொன்று: 'கேளாம் புறம்' என்று வந்ததனால், 'புறம்' என்னும் சொல் புறச்சமய மொழிகளை உணர்த்துகிறது என்பது.

பதி ஞானத்தைப் பற்றி மெய்கண்ட தேவர் 'சிவஞான போதத்'தில் கூறுவதனால், அந்த 'ஞானம்' தகுதியாக வாய்க்காத புறச் சமயத்தார், பசுஞானம், பாசஞானமே நிரம்ப உடையவராவர்; ஆதலால், அவர்கள் புறமொழி கூறுவது இயல்புதான்; அதனைக் கேட்பதிற் பயனில்லை.

சமயங்களில் பல, புறப்புறம், புறம், அகப்புறம் என மூன்று வகையான புறச் சமயங்களாய் உள்ளன. 'அவ்வளவில் அவர் மகிழ்க' என்று, அப் புறச் சமயப் புன்மொழிகளை மெய்கண்ட தேவர் 'கேளாம்' என்று விட்டுவிட்டார்.

ஆனால், அகச் சமயிகள் என்பதில் அடங்குகின்ற 'பாடாண வாத சைவர்' முதலியோர், சொல்லுவதை அப்படி எளிதாக விட்டு விடுவதற்கில்லை; சிவஞானத்தை நிறைவாகப் பெறாதவர் ஆதலால், அவர்கள் பேசுவது, உண்மையறியாத புறச் சொல்லாய் அமைகின்றன. புறங் கூற்று மொழியாய் இருக்கும். 'புறம்' என்னும் சொல், இந்த அகச் சமயிகளை நோக்கியே புறங் கூற்று மொழியென்று பொருளாகின்றது. இவர்கள் புறங் கூற்று மொழிகளையும் கேட்டுப் பயனில்லை யாதலின், 'கேளாம்' என்றார்.

தெய்வம் பற்றியும், தெய்வ ஞானம் பற்றியும், அதனை உரைக்கும் நான்மறைப் பொருள்கள் பற்றியும், சிவஞான போத நூலிற் கூறப்படுவதனால், சமயிகள் இங்கே கருதப்பட்டனர்.

சமயம் சாராத மற்ற மக்கள் உரைகளைக் கேட்பதிற் சற்றும் பயனில்லை என்பது வெளிப்படை; ஆதலால், மெய்கண்ட தேவர் இங்கே சமயிகளைப் பற்றியே எண்ணினார். அதிலும் அகச் சமயிகளின் புறங் கூற்று மொழிகளையே இங்கே முதன்மையாய்க் கருதினார். அவையடக்கச் செய்யுளால் விளங்குவன இவை.

முதல் இரண்டு வரிகள் சான்றோர் இயல்பையும், பின் இரண்டு வரிகள் அல்லாதார் இயல்பையும் புலப்படுத்து கின்றன. புறச்சமயம் அகச்சமயமாகிய 24 வகைச் சமயங் களையும் சமயத்தாரையுங் கருதி, அவர்கள் நிலைக்கு மெய்கண்ட தேவர் இரங்கினார்; இரங்கியவர், முன் இரண்டு வரிகளிற் கூறப் பட்ட சான்றோர் என்பவர், இந்த 24 சமயங்களையும் சாராத 'சித்தாந்த உண்மையராதலின், அவர் நிலைக்கு, மற்றவர் உயர வேண்டும் என்பதையும் அருளாற் புலப்படுத்துகின்றார். 'கேளாம் புறன்' என்று கூறி அவரை அகப்படுத்தாமற் செல்வ தனால் இது தெரிகிறது; புலால் மறுப்பவரை 'அகத்தார்' என வும், மறுக்காதவரைப் 'புறத்தார்' எனவும், வள்ளலார் பிரித்த தற்கும் 'புறத்தார்' அகத்தாராக வேண்டும் என்னும் அருளே காரணம்.

சிவஞானபோதம் அத்தகைய உயர்ந்த சித்தாந்த ஞானம் அமைந்த தலைமையான நூல் என்பதும் இதனால் தெரிகின்றது.

IV

நூல் :

சிவஞான போதம் முதல் நூல்; அதன்படி ஒழுகிச் 'சித்தி' பெற்றவர் அருணந்தி சிவனார். ஆதலால், அவர் அருளிச் செய்த வழிநூல் 'சிவஞான சித்தி' ஆயிற்று. 'சிவஞான போதம்', 'சிவஞான சித்தியார்' என்னும் இரண்டு நூல்களின் வழிநின்று ஒளி பெற்றவர் உமாபதி சிவம்; ஆதலால் அவர் இயற்றிய சார்பு நூல் 'சிவப்பிரகாசம்' எனப் பெயர் பெற்றது. எல்லாரும், போதம் சித்தியாகி ஒளிபெற வேண்டும் என்பது இந் நூல்களின் கருத்து.

சிவஞானபோத உண்மைகள், சிக்கல் இல்லாதவை. உலக மக்களின் முதல் நிலை அறிவுநிலை யாதலால், ஆராய்ச்சி வகை யாய், அதற்குப் பொருந்தும் முறையில், மெய்கண்ட தேவர் தம்

முடிபுகளை அருளிச் செய்கிருர். குழந்தைப் பருவத்திலேயே, அவர், வினையின் நீங்கி விளங்கிய அறிவினராய்த் திகழ்ந்ததனுல், அவர்க்கு இச் சிறப்பு அமைந்தது! எப்படி விளக்கினுல் உலகத்தில் சிவஞான போதம் பரவும் என்பதை அவர் நன்கறிந்தவராய் இருந்தார்.

அங்ஙனம் விளக்கம் செய்வதற்கு அடிப்படையாய் அமைந்தது, 1. அளவை முறை (தருக்கம்); அஃதாவது, 'மேற்கொண்ட கருத்து', அதற்கு 'ஏது', அந்த ஏதுவை வலியுறுத்தும் 'எடுத்துக்காட்டுக்கள்' என்னும் முறைமைகள்! அத் தருக்க முறைமைக்கு உதவிய வேறு அடிப்படைகள், 2. 'உள்ளது சிறத்தல்' என்னும் (சற்காரிய வாதம்), 3. சார்ந்ததன் வண்ணமாதல், 4. இரண்டற்ற கலப்பு என்னும் (அத்துவிதம்) என்பன.

'சிவஞான போதத்'தில், 'உலகம்' 'உயிர்' 'கடவுள்' என்னும் முப்பொருள் உண்மைகளும், அவற்றின் இயல்புகளும், பயிற்சிகளும், பயன்களும் விளக்கப்படுகின்றன. இம் முப்பொருள் உண்மைகளே உலகத்தில் எல்லா நூல்களாலும், எல்லாச் சமயத்தாராலும் ஆராயப்படுவன. 'சான்றவர் ஆய்ந்திடத் தக்கவாம் பொருள் மூன்றுள; மறையெலாம் மொழிய நின்றன'.

இம் முப்பொருள்களுள் கடவுளை 'அறம்' என்றும், உலகத்தைப் 'பொருள்' என்றும், உயிரை 'இன்பம்' என்றும், நான்மறை விளக்கும். எதிரில் இருக்கும் உலகத்தை ஆராய்ந்து, உயிர், தனது சிற்றின்ப நிலை உணர்ந்து, கடவுளைச் சார்ந்து, பேரின்ப நிலையைப் பெறுவது வீடு அல்லது விடுதலை எனப்படும். இந் நிலையில் உயிர்க்கு அதன் இயல்புரிமை சிறக்கிறது.

இவ் வாராய்ச்சியில் 'உலகம்' நமக்கு முன், வழிகாட்டியாயுள்ளது. அதில் உயிர்களும் உள்ளன. உயிர்க்குள் உயிராய் உள்ளும் புறமுமாகக் கடவுள் கலந்திருக்கிருர்; இவ்வாறு முன்னோர் கூறுகின்றனர். நாமும் நம் அறிவுக்கு ஏற்ப இவ்வுண்மைகளை ஆராய்ந்து பார்க்கலாம். அவர்கள் கூறுவதையே நம்பிவிட வேண்டும் என்பதில்லை; 'கருதலளவை' தருக்கத்தின் அதற்காகவே அமைந்தது; அவரவர் சிந்தனைக்கு அமைதி ஏறபட்டால் மட்டுமே நம்பித் துணிய முடியும். சமயத் துறையில் வாழ்க்கையையே மாற்றி அமைக்க வேண்டியிருப்பதனுல், இக் கருதல் அளவை முக்கியமாயிற்று. அதனுலேயே 'சிவஞான போதம்' சிந்தனைக்கும் பயன்படும்படி, தருக்க முறையிற் செல்வோர்க்கும் உதவியா யிருக்கும் வகையில், அருளிச் செய்யப்

பட்டது. இரண்டாண்டு நிலையிலேயே மெய்கண்டார் இவ்வளவு அறிவுத் திறமாக நூலைத் திருவாய் மலர்ந்தது, மிகப் பெரும் வியட்பாயிருக்கிறது. மேற்கோளும் ஏது எடுத்துக்காட்டுகளும் இதனால் அப்பெருமானே அருளிச் செய்திருக்க வேண்டும் என்றும் தெரிகிறது.

அதற்கு உதவுவது, மேலெடுத்துக் காட்டிய அடிப்படை வகைகளில் 'தருக்கம்' என்பது; இத் தருக்கத்தால் 'உள்ளது சிறத்த'லாகிய சற்காரிய வாதம் முதலியன பெறப்படுகின்றன.

'சற்காரிய வாதத்'தால் விளங்குவது உலகம்; எவ்வளவு அறிவுடையோரும் இதனை ஆராய்ந்து பார்த்துக் கொள்ளலாம். எல்லாம், மெய்கண்ட தேவரால் மேன்மேலும் விளக்கப் படுகின்றன. அவற்றை அங்கங்கே பார்க்கலாம்.

சார்ந்ததன் வண்ணமாய் இருப்பது, உயிர்களின் இயல்பு என்பதையும் இரண்டற்ற கலப்பினால் (அத்துவிதத்தால்) கடவுள் நிலையை அறியலாம்.

சிவஞான போதம் முழுதும், இந் நான்கு அடிப்படைக் கருத்துக்களால், முப்பொருள் உண்மைகள், அறிவுக்கு விருந்தாய், எல்லாச் சிக்கல்களும் நீங்கும் முறையில், தெளிவாக விளக்கப்படுகின்றன.

ஞான உண்மைகளைத் தெளிந்துகொள்வதற்கும், நம்புவதற்கும், பழகுவதற்கும், பயன் எய்துவதற்கும் நமக்கு உலகமே வகை செய்கின்றது. காணப்படும் உலகைக் கொண்டு காணப்படாத பிறவுண்மைகளையும் நாம் அறிந்துகொள்ள நேர்கின்றது. பொது மறையாகிய திருக்குறளும், இந்த இயற்கை முறையையே மேற்கொள்கிறது. மெய்கண்ட தேவர், உலகைக் கொண்டு, கடவுளுண்மை, உயிருண்மை, மல வுண்மை, கடவுள் யார் என்பது முதலிய எல்லாம் இம் முதல் நூற்பாவில் தெளிவிக்கிறார்.

இனி, நூலில் உட்சென்று நூற்பாக்களின் கருத்துக்களைக் காணலாம்.

முதல் நூற்பா:

அவன் அவள் அது எனும் அவை, மூவினைமையின்,
தோற்றிய திதியே; ஒடுங்கி, மலத்து உள தாம்;
அந்தம் ஆதி, என்மனார் புலவர்.

'அவன் அவள் அது எனும் அவை' என்பது உலகம்; நமக்கு எதிரிலிருக்கும் இவ்வுலகத்தைக் கொண்டுதான் எல்லா முடிவுகளுக்கும் நாம் வரவேண்டியிருக்கிறது. காண்டல், கருதல், உரை என்னும் மூவகைத் தருக்கங்களால் ஆராய்வதற்கும் உலகம் இடங்கொடுக்கும். சிவஞான போதத்தின் முன் ஆறு நூற்பாக்களில் பொருளாராய்ச்சியும் தருக்கமும் முக்கியம் பெறுகின்றன. இவற்றில் தீர்ந்த தெளிவு ஏற்பட்டால் அதன் உண்மைப் பகுதி ஆறு நூற்பாக்களின் கருத்துக்களை நம்பி, வாழ்க்கையின் பயிற்சி செய்யவும் பயன் எய்தவும் முடியும்.

மெய்கண்ட தேவர் இவ்வுலகத்தை 'உலகம்' என்னும் பெயராற் கூருமல், 'அவன், அவள், அது என்னும் அவை' என்று, பாகுபாடுகளோடு கூறுகிருர். உலகம் ஆண் என்றும், பெண் என்றும், அண்டமாகிய அது என்றும், வகைப் படுகிறது. ஆதலால், அப்படிக் கூறினர்.

பிரித்ததனுல், உலகம் என்ற ஒன்று, பலவாயின. 'அவன்' 'அவள்' என்றதில், ஆண் பெண் உயிர்களும் அவ்வுயிர்கள் பொருந்திய உடம்புகளும் நினைவுக்கு வரும். உயிர்களிலேயே ஆண் உயிர் பெண் உயிர் உண்டு என்பதும், அதற்கேற்றபடியே அவற்றிற்கு ஆண் உடம்பு பெண் உடம்புகள் கிடைக்கின்றன என்பதும் இதனுல் விளக்கமாகும். உயிர்கள் அங்ஙனம் உடம்புகளோடு கூடியிருப்பதனுல், அவ்வுடம்புகளை நினைந்து 'எனும் அவை' என அஃறிணையில் வந்தன; உடம்போடு கூடாத உயிர்களும் அஃறிணைப்படும். அவன், அவள், அது, அவை என்னும் சொற்களில் 'அ' என்னும் சுட்டெழுத்து வருதல் நினைவு கூர்க. சுட்டறிவுக்குச் சுட்டெழுத்துக்களையே ஆசிரியர் பயன் படுத்தினமை மிகவும் வியக்கத்தக்கது.

இதனுல், 'அவன்' 'அவள்' என்பதில், சுட்டுதற்கேற்றபடி வருவது, முக்கியமாய், அவற்றின் உடம்பு; உடம்புகளோடு உயிர்கள் கூடியிருப்பதனுல் உயிர்களும் சிறுமையடைந்து சுட்டெழுத்துக்களால் சுட்டிச் சொல்லவேண்டிய நிலைமையை அடைந்துவிட்டன. சுட்டப் பட்டவையாதலின், 'ஆண் உடம்பு, பெண் உடம்பு, அது,' என்னும் உலகம் எல்லாம் அறியாமைப் பொருள்கள் ஆகின்றன; 'அவன்' 'அவள்' என்பதில் உயிர்களும் அவற்றின் உடம்புகளும், 'அது' என்பதில் உலகமும் அடங்கும்.

இப்போது 'அவை' என்னும் உலகத் தொகுதியை ஆராய்ந்து பார்த்தால், சில கருத்துத்தொகுப்புகளை நாம் அறிய முடியும். 1. பலவாய்ப் பாகுபட்டுள்ளமை; 2. ஒவ்வொன்றும்

மேலும் பலவாகி, அதனல் சுட்டறிவு கொண்டு குறிக்கப்படுதல்; 3. அப்படிக் குறிக்கப்படுவன சிற்றறிவுள்ள உயிர்களாகவும் அறிவிலாப் பொருளாகவும் இருத்தல் என்பன.

சிவஞான முனிவர் இதனுல் "பகுத்து, பலவாய், சுட்டி உணரப்படும் பிரபஞ்சத் தொகுதி" என்று கூறினுர். "அவயவப் பகுப்புடையதாயும், பலவேறு வகைத்தாய்ச் சமமாய்ச் சுட்டி யறியப்படுவதாயும் இருத்த"லே மேலும் அவர் கூறுவார். 'அவயவப் பகுப்பு' என்றதனுல், 'அவன்' 'அவள்' என்னும் உயிர்களும், 'அது' என்னும் உலகமும் உறுப்பாக உடையதாதலின், அவ்வுறுப்புகளன்றி 'உலகம்' என வேறு இல்லை என்பது பெறப்படும்.

சடப் பொருளாக உலகம் இருத்தலால், அது 'தோற்றம்' 'இருப்பு 'அழிவு' என்னும் முத்தொழில்களையும் உடையதாய் இருக்கிறதென்று தெரிகிறது; நேரிலும் கண்கூடாகவே இவற்றைப் பார்க்கலாம்.

இம் மூன்று தொழில்களும் உலகத்தில் காட்சியளவைக்கே காணப்படுகின்றன. இவற்றைக் கொண்டு கருதலளவையாய்ச் சிந்தனை பிறந்தால் இவற்றில் ஒன்று மற்ற இரண்டையும் துணை கொண்டே நிகழ்த்தப் புலப்படும். மேலும், இத் தொழில்கள் தாமே நடைபெறுமா? இல்லாத மூலப் பொருள்களில் நிகழுமா? தொழில்கள் நிகழ்வதற்குக் காரணம் என்ன? முத்தொழிலில் எந்தத் தொழில் மிக்க ஆற்றலுடையது? அந்த ஆற்றல் மிக்க தொழிலைப் புரிபவனே 'முதல்வன்' எனலாமா? அவன் ஒருவனு? என்பவற்றிற்கும் விடை கிடைக்கும்.

உலகம் அறிவில்லாத பொருள்; அது, தானே தொழிற் படாது; அப்படியானுல் முத்தொழிலையும் உலகிற் செய்வது யார்? யாரோ பேரறிவுள்ள ஒருவர் செய்வதாகத்தான் இருக்க வேண்டும்; அவ்வொருவரையே 'கடவுள்' என்று பெரியோர் கூறினர்.

அங்ஙனமன்று, முத்தொழில் நிகழ்ச்சி உலகிற் காணப் படுவது இயற்கை; இதற்குச் செய்வோன் எதற்கு என்று நினைக் கலாம்.

அப்படி நினைப்பதானுல், 'இயற்கை' என்று சொல்லப் படுவது அறிவுடையதா, அறிவு இல்லாததா என்று திருப்பிக் கேட்க நேரும்.

'அறிவுள்ள இயற்கையே' என்பதானுல், அதைத்தான் முன்னுேர் 'கடவுள்' என்னும் பெயராற் கூறினர் என்று முடிக்கப்படும்.

மேலும், ஓர் உண்மை தெளிவாகும். 'உள்ள பொருளாய்' எது இருக்கிறதோ அதற்குத்தான் முத்தொழில் கூறுவது இயற்கையாயிருக்கிறது. இல்லாத பொருளில் தொழில் அமைவது எப்படி முடியும்! தொழில் நிகழ்வதற்கு, அதை நிகழ்த்தும் அறிவு வேண்டப்படும்.

நுட்பமாய் உள்ளது, தூலமாய்ச் செயற்படுகின்றது; அப்படிச் செயற்படுவதையே 'தொழில்' என்று சொல்லுகிறோம்.

உள்ள பொருளை ஒரு கடவுள் தோற்றினர் என்று முடிவு செய்யப்படுவதனால், தோற்றத்தின் தொடர்பாக இருப்பு இறுதிகளையும் ஒருவர் செய்கிறார் என்றே எண்ண வேண்டியிருக்கிறது. இங்ஙனம் அறிஞர் ஒருவரால் தோற்றிய திதிப் பொருள் 'உலகம்' என்று முடிவு செய்யப்படும். 'திதிப் பொருள்' என்பது, 'உள்ள பொருள்' என்பதை உணர்த்தும்.

அவ்வாறு உலகத் தொகுதி ஒடுங்கி, மலங் காரணமாக (அறியாமை காரணமாக) மீண்டும் தோற்றமுறுகின்றது.

அங்ஙனம் தோற்றுவிப்பானும், சிலகாலம் இருக்க வைப்பவனும், பினனல் அழிப்பவனும், யார் என்பதுதான் இனி, இங்கே எண்ணுதற்குரியது.

தோற்றத்தை உண்டுபண்ணுபவனுக்குத் தான் அழிக்கவும் உரிமை உண்டு; அழிப்பவன் முந்தும்போது, தோற்றமும் தோற்றுவிப்பவனும் இருப்பும நிலையற்று இருக்க வைப்பவனும் ஆற்றல் அவிந்துவிடுதல் இயல்பு; ஆதலால், அழிக்கும் முதல்வனே தோற்றுவிக்கும் முதல்வனும் ஆவான்.

ஆற்றல் அவியாமல் அவரவரும் விளங்குவதானல், அழிப்பது எப்படி முடியும்? ஆதலால், அழிப்பவர் எவரோ அவரே ஆற்றல் வாய்ந்த கடவுள் என்று துணிய வேண்டியிருக்கிறது!

அக் கடவுள் நமக்கு வெளிப்படையாய்த் தெரியவில்லை. நமக்கு எட்டாதவராய் இருக்க வேண்டும். அப்படிக் கடந்திருப்பதனல் அவரைக் 'கடவுள்' என்று சொல்ல வேண்டியிருக்கிறது!

உலகத்தில், முடிவான பொருளெல்லாம் ஒன்ருகவே உள்ளன. ஆதலால், கடவுள் ஒருவர் என்றே சொல்லப்படுகிருர். கடவுள் என்பவா ஒருவரேயாய் முடிதலால், அளவை நூல் அறிந்தவர்கள் இவ்வாறு கூறுகிருர்கள்.

இவை இந் நூற்பாவின் கருத்துக்கள்! இவற்றின்மேல், ஆய்வோர் சிலர் அறிவுக்குத் தோன்றும் சிக்கல்களுக்கு, மெய் கண்ட தேவர் விளக்கம் கூறித் தெளிவுபடுத்துகிருர். விளக்கங்களை இனி ஆராயலாம்.

(வரும்)

உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

(முன் சிலம்பு ௫௦ : ௯௩௩ஆம் பக்கத் தொடர்ச்சி)

முல்[5]—வளைதற்கருத்து வேர்ச்சொல்.

சாய்தல், கோணுதல், வளைதல், நெளிதல், மடங்குதல், திருகுதல், வட்டமாதல், முடிதல், சுற்றுதல், சுழலுதல், புரளுதல், உருளுதல், உருண்டையாதல், திரிதல், திரும்புதல், சூழ்தல் முதலிய பலவும் வளைதற் கருத்தொடு தொடர்புள்ளவையாம்.

முல்—வில் = வளைந்த வேட்டைக் கருவி.

ஒ நோ: முடுக்கு—விடுக்கு = (ஒரு சிறு மடக்கு நீர்).

வில்—விலா = வளைந்த நெஞ்செலும்பு அல்லது நெஞ்சக்கூடு.

ம. வில், தெ. வில்லு, க. பில்.

முல்—முன்—முனி = வில், (திவா.) ''முனிநாண் கோத்து'' (உபதேசகா. பஞ்சாக். 96).

முல்—மூல்—மூலை = 1. கோணம். ''மூலை முடுக்குகளும்'' (இராமநா. சுந். 3). 2. மூலைத்திசை (W). 3. அறைமூலை. ''இருட்டறை மூலையிலிருந்த குமரி'' (திருமந். 1514).

ம. மூல, தெ. மூல, க. மூலெ.

மூலைக்குத்து = 1. முற்றுத்து மூலைக்கு எதிராக வீட்டுத் தலைவாயில் நிலை அமைந்திருக்கை. 2. மூலைப் பார்வை.

மூலைத்திசை = பெருந்திசைகட்கு நடுவேயுள்ள கோணத் திசை.

மூலைப்பார்வை = 1. கோணத்திசையை நோக்கிய வீட்டுநிலை. 2. சாகுந்தறுவாயில் விழி ஒருபுறமாகச் செருகி நிலைக் குத்திடுகை.

மூலைமட்டம் = 1. நேர்கோணம். 2. மூலை மட்டப்பலகை (கட்டட. நாமா).

மூலை முடங்கி (மூலை முடக்கு) = வளைந்து செல்லும் சிறு வழி. (W.).

மூலையரம் = முப்பட்டையரம். (W.).

மூலையோடு = முகட்டுச்சியில் வேயும் ஓட்டுவகை.

மூலைவாசல் = தெருவிற்கு நேராகவன்றி ஒதுக்கமாயமைந்த வாயில்.

மூலைவாட்டு (மூலைவாட்டம்) = மூலை வாக்கு.

மூலை விட்டம் = நாற்கோணத்தின் எதிர் மூலைகளைச் சேர்க்குங் கோடு.

முல்—முர்—முரு—முருகு = பிறைபோல் வளைந்த காதணி. "வச்ர முருகையெந்தக் கோனுன்றன் கையிற் கொடுத்தானோ" (விறலிவிடு. 703).

முரு—மரு—மரை = 1. திருகுவகை. 2. விளக்குத் திரியை ஏற்றியிறக்கும் திருகுக்காய்.

மரையாணி = திருகாணி.

தெ. மர, க. மரெ.

முரு—முரி. முரிதல் = 1. வளைதல். "முரிந்து கடைநெரிய வரிந்த சிலைப்புருவமும்" (மணி. 18 : 161). 2. வளைந்து ஒடிதல். (சூடா.) (கரும்பு கம்பு முதலியவற்றை ஒடித்தற்கு அவற்றை வளைத்தல் காண்க.) 3. கெடுதல். "இடைக்கண் முரிந்தார் பலர்" (குறள். 473). 4. தோல்வி யுறுதல். "முற்றிய வமர்சேனை முரிந்தன" (விநாயகபு. 34 : 15). 5. சிதறுதல். "பஞ்சினம் புகைமுரிந் தெழுந்தென விண்ணத்தலமர" (கல்லா. 7). 6. தளர்தல். "முரிந்த நடை மடந்தையர்த முழங்கொலி யும் வழங்கொலியும்" (திருவிசை. கருவூ. 5 : 10). 7. தவறுதல். "முரியுங் காலைத் தெரிய மற்றதிற் றட்டினள்" (பெருங். வத்தவ. 12 : 99). 8. நீங்குதல். (சீவக. 372). 9. நிலை கெடுதல். "இடை முரிந்து வேந்தனும் வேந்து கெடும்" (குறள். 899). 10. குணங்கெடுதல். "ஒழுகுபால் கதிர்வெயிற் படமுரிந்து" (திருச்செந். பிள்ளைத். செங்கீரை. 1).

முரி முரிதல் = வளைதலைச் செய்தல். "புருவமும் முரி முரிந்தவே" (சீவக. 2310).

ம., க. முரி.

முரித்தல் = 1. வளைத்து ஒடித்தல். "நன்சிலை முரித்திட் டம்பை வாடினன் பிடித்து நின்றான்" (சீவக. 2185). 2. தோற்கச் செய்தல். (யாழ். அக.). 3. அழித்தல். "மதிலொடு வடவாயிலை முரித்து" (திருவாலவா. 24 : 4). 4. திறமையாக நடாத்துதல் (W.) வெட்டி முறித்தல் என்னும் வழக்கை நோக்குக.
ம. முரிக்க, தெ. முரியு.

முரி = 1. வளைவு. முரியா ரளகத் தடாதகை (திருவிளை. பயகர. 8). 2. துண்டு. 3. நொய்யரிசி. "குத்திய வரிசி யெல்லா முரியறக் கொழிக்க வாரீர்" (தக்கயாகப். 736).

4. முழுதிற் குறைவானது. ''மக்கண் முரியே'' (கலித். 94). 5. சிதைவு. (சிலப். 25 : 146, அரும்). 6. எழுதிய ஓலை நறுக்கு. 7. இசைப்பாவில் இறுதிப் பகுதி. (சிலப். 6 : 35, உரை). 8 நாடகத் தமிழின் இறுதியில் வருஞ் சுரிதகம். (தொல். பொ. 444, உரை).

ம., தெ., க., து. முரி.

முரிவு=1. மடிப்பு. (யாழ். அக.). 2. வளைந்து ஒடிகை. (யாழ். அக.). 3. சுருக்குகை. ''புருவ முரிவுகண் டஞ்சி'' (முத் தொள். களம்.). 4. நீங்குகை. ''இளையர் மார்ப முரிவில ரெழுதி வாழும்'' (சீவக. 372). 5. வருத்தம். ''பாவைமார் முரிவுற்றார்களின் மூர்ச்சனை செய்பவால்'' (சீவக. 1627). 6. சோம்பு. (அரு. நி.).

முரு—முறு—முறுகு. முறுகுதல்=(செ. கு. வி.) 1. திருகு தல். (பிங்). 2. விரைதல். ''முறுகிய விசையிற்றாகி'' (சீவக. 796). 3. முதிர்தல். ''கனிமுறுகி விண்டெனை'' (சூளா. சீய. 7). 4. மிகுதல். ''வேட்கையின் முறுகி யூர்தர'' (சீவக. 1183). 5. கடுமையாதல். ''வெயின் முறுக'' (நாலடி. 171). 6. காந்திப் போதல். 7. செருக்குதல். ''வரையெடுக்க லுற்று முறுகினான்'' (தேவா. 289 : 10).—(செ. குன்றாவி.) மீறுதல். (பிங்.).

ம. முறுகு.

முறுகு—முறுகல்=1. திருகல். திருகல் முறுகல், பிரண்டை போலத் திருகல் முறுகலானது. (உ. வ.). 2. மிகுதியாக வெந்தது. தோசை யொன்று முறுகலாகப் போடு. (உ. வ)

முறுகு—முறுக்கு. முறுக்குதல்=(செ. குன்றாவி.) 1. கயிறு முதலியன திரித்தல். ''வாய்மடித் திரண்டு கையு முறுக்கி'' (கம்பரா. மருத்து. 10). 2. முறுக்காணியைத் திருக்குதல். 3. மிகைபட முறுக்கி யொடித்தல். ''பிடிபடி முறுக்கிய பெருமரப் பூசல்'' (அகநா. 8). 4. சுழற்றுதல். ''முறுக்கிவிட்ட குயமகன் றிகிரிபோல'' (சீவக. 786). 5. வெற்றிலை சுருட்டி யுண்ணுதல். (நாஞ்). 6. கை கால்களைப் பிசைந்து தேய்த்தல். (W.)—(செ. கு. வி.). 1. செருக்குதல். 2. மாறுபடுதல். 3. சினத்தல் (யாழ். அக.).

ம., க. முருக்கு, தெ. முரக்கட்டு.

முறுக்கு=1. திரிக்கை. 2. திருகாணிச் சுற்று. 3. முறுக்கிச் சுட்ட பலகாரம். ''அடைமுறுக்கு'' (விநாயகபு. 39 : 39). 4. இதழ் முறுக்குள்ள அரும்பு ''முறுக்குடைந் தலர்ந்த மலர்களும்'' (காஞ்சிப்பு. திருக்கண். 180). 5. நூலு

ருண்டை. 6. வலிப்பு. (இலக். அக). 7. நெறிப்பு. (W). 8. கடுமை. (இலக். அக). 9. மாறுபாடு. (W). 10. செருக்கு. 11. மிடுக்கு. "கிழமாய் நரைத்து முகந்திரைந்து மிந்த முறுக்கேன்" (தனிப்பா. i, 88 : 173).

முறுக்கு—முறுக்கம்=1. திருகல். 2. முடுக்கு. 3. கடுமை.

முறுக்கு—முறுக்கி=முறுக்குங் கருவி. வில்லை முறுக்கி= ஒரு கருவி (Spanner).

முறுக்கவரை, முறுக்காணி, முறுக்கு மீசை, முறுக்கு வட்டம், முறுக்கு விரியன் முதலிய கூட்டுச் சொற்கள் முறுக்கவியல் பற்றியன.

முறுக்கு—முறுக்கான்=1. முறுக்கிய புகையிலை. 2. புகையிலையுடன் போட்டுக் கொள்ளும் தாம்பூலம். (நாஞ்.).

ம. முறுக்கான்.

முறு—முற்று. முற்றுதல்=1 சூழ்தல். "பாண் முற்றுகநின் னுண்மகிழி ருக்கை" (புறநா. 29). 2. கோட்டையைச் சூழ்ந்து பொருதல். "முற்றிய வகத்தோன் விழ்ந்த நொச்சியும்" (தொல். புறத். 13). க. முத்து.

முற்று=முற்றுகை. "முற்றியார் முற்று விட" (பு. வெ. 6 : 25).

முற்றுகை=1. சூழ்கை. 2. கோட்டையைப் பகைவர் படை வளைக்கை. 3 நெருக்கடி. (W.).

முற்றுகை—முற்றிக்கை=1. கோட்டையைப் பகைவர் படை வளைக்கை. 2. நெருக்கடி நிலைமை. சாப்பாட்டிற்கு மெத்த முற்றிக்கையா யிருக்கிறது. (இ. வ.).

தெ. முத்தடி, க. முத்திகெ (g).

முற்றிக்கை—முற்றிகை=கோட்டையைப் பகைவர் படை வளைக்கை.

முறுகு—மறுகு. மறுகுதல்=1. சுழலுதல். "மறுகக் கடல் கடைந்தான்" (திவ். இயற். 2 : 68). 2. பலகாலுந் திரிதல். "மலிவன மறுகி" (குறிஞ்சிப். 97). 3. மனங்கலங்குதல். "நெஞ்சின் மறுகல் நீ" (சீவக. 946). 4. வருந்துதல். "கிடந் துயிர் மறுகுவதாயினும்" (அகநா. 29). 5. சிதைதல். "குடன் மறுகிட" (கம்பரா. இந்திரசித். 19). 6. அரைபடுதல். "நறுஞ் சாந்து மறுக" (மதுரைக். 553).

மறுகு—மறுக்கு. மறுக்குதல்=1. மனத்தைக் கலக்குதல். "மறுக்கி வல்வலைப் படுத்தி" (திவ். திருவாய். 4 ; 9 : 6).

2. எண்ணெய் முதலியவற்றால் தொண்டை கரகரத்தல். (இ.வ.)

மறுக்கு=மனக்கலக்கம். "மறுக்கினோ டிரியல் போயுற" (கம்பரா. பள்ளிபடை. 109).

மறுக்கு—மறுக்கம்=1. சுழற்சி. 2. மனக்கலக்கம். "மன்பதை மறுக்கத் துன்பங் களைவோன்" (பரிபா. 15 : 52). 3. துன்பம். "திறைகொடா மன்னவரை மறுக்கஞ் செய்யும் பெருமையார்" (தேவா. 17 : 4).

மறுகு—மறுகல்=1. சுழற்சி. 2. கலங்குகை. "பேதையேன் நெஞ்சம் மறுகல் செய்யும்" (திவ். திருவாய். 9 : 4 : 4). 3. நோய் திரும்புகை. (W.)

மறுகல்—மறுகலி. மறுகலித்தல்=நோய் திரும்புதல் (யாழ். அக.).

முறு—முறி. முறிதல்=1. வளைந்து ஒடிதல். "அச்சு முறிந்ததென் றுந்தீபற" (திருவாச. 14 : 2). 2. தோற்றல். 3. நிலைகெடுதல். "அரக்கனெடுத்து முறிந்து" (பெரியபு. திருஞா. 77). 4. அழிதல். "வீரமுறிந்த நெஞ்சினர்" (விநாயகபு. 79 : 66). 5. தன்மை கெடுதல். பால் முறிந்து போயிற்று. (உ. வ.). 6. பதந்தப்புதல். நெய் முறியக் காய்ந்ததனாற் கசக்கின்றது. (உ. வ.). 7. பயனறுதல். இரசம் முறிய மருந்து சாப்பிடுகிறது (W.). 8. குலைதல். 9. அருள் மாறுதல்.

ம. முரிக, தெ. முரிக்கொனு, க. முரி.

முறித்தல்=1. ஒடித்தல். "பொருசிலை முறித்த வீரன்" (பாரத. கிருட்டிண. 141). 2. கிழித்தல். வேட்டியை இரண்டாக முறி. 3. நிறுத்தி விடுதல். ஏலச்சீட்டை முறித்துவிட்டான். 4. தன்மை மாற்றுதல். "ஆசைப்பிணி பறித்தவனை யாவர் முறிப்பவர்" (கம்பரா. அங்கத. 18). 5. நெசவுத்தறியில் உண்டை மறித்தல். 6. பெருவினைகளைச் செய்து முடித்தல். நீ பலவற்றை வெட்டி முறித்து விட்டையோ? (உ. வ.).

முறி=1. துண்டு. "கீண்டவளையின் முறியொன்று கிடப்ப" (ஞானவா. சிகித். 107). 2. உடைத்த தேங்காயிற் பாதி. தேங்காய் முறி. 3. பாதி. 4. ஆவணம். "மோகவாசை முறியிட்ட பெட்டியை" (தாயு. சிற்ப. 1). 5. ஓலைப் பற்றுமுறி. 6. துணி. "கொள்ளிமுறிப் பாதியேது" (அரிச். பு. மயான. 41) 7. நகர்ப்பகுதி, சேரி. (பிங்.). 8. அறை. (நாஞ்.). 9. உயர்ந்த வெண்கலம்.

முறி—மறி. மறிதல்=1. மடங்குதல். 2. முறுக்குண்ணுதல். "திரிந்து மறிந்துவீழ் தாடி" (கலித். 15). 3. கீழ் மேலாதல். "மலைபுரை யானை மறிந்து" (பு. வெ. 7 : 9). ௪. திரும்புதல், மீளுதல். "மறிதிரை" (கலித். 121). 5. முதுகிடுதல். "மைந்தர் மறிய மறங்கடத்து" (பு. வெ. 6 : 14). 6. சாய்தல். "எரிமறிந் தன்னநாவின்" (சிறுபாண். 196). 7. விழுதல். "நிழன்மணிப் பன்றி யற்று மறியுமோ" (சீவக. 2201). 8. பலகாலுந் திரிதல். "நயனுடி நட்பாக்கும் வினைவர்போன் மறிதரும்" (கலித். 46). 9. நிலைதுலைதல். "ஆம்பன் முகவரக்கன் கிளையொடு மறிய" (கல்லா. கணபதி. வாழ்). 10. அறுபடுதல். "உன் காது மறியும்" (திவ். பெரியாழ். 2 : 3 : 6, அரும்). 11. தடைப்படுதல். 12. சாதல். "மறிந்த மகன்றனைச்சுட" (அரிச். பு. மயான. 38).

மறித்தல்=1. திருப்புதல். 2. திரும்பச் செய்தல். 3. கீழ் மேலாக்குதல். (W.). 4. தடுத்தல். "மறுபிறப் போட மறித்திடுமே" (திருவாச. 36 : 2). 5. கிடை யமர்த்தல். நன்செய்க்கு மூன்று கிடை மறிக்க வேண்டும். 6. தடுத்தற் குறியாகக் கை யசைத்தல். "மாற்றருங் கரதல மறிக்குமாறு" (கம்பரா. உண்டாட். 21).

மறி=மறியல்.

மறிகால்=மறுகால்.

மறிசல்=அணை.

மறித்து=திரும்ப. "மறித்தாங் கிழிந்து" (மணி. 10 : 88).

மறித்தும்=திரும்பவும், மீண்டும் "வேலானை மறித்துங் காண்க" (சீவக. 1225).

மறிதரல்=மீளுகை. (பிங்.).

மறிந்து=மீண்டும். "மறிந்து வந்தனரே மாற்றோர்" (பெருங். மகத. 19 : 80).

மறிப்பு=மறியல்.

மறிபடுதல்=1. தடுக்கப் படுதல். 2. இடையூறு படுதல். (கோயிலொ. 13).

மறியல்=1. வணிகம், தொழில், கல்வி, அலுவல், போக்குவரத்து முதலியன நடைபெறு வண்ணம் தடுத்தல். 2. சிறைக்கூடம்.

மறிவு=1. திரும்புகை. "மறிவிலாச் சிவகதி" (அருட்பா, ப, செவியறி. 6). 2. கேடு. (ஐங்குறு. அரும்).

முறு—முறை=1. வளைவு. 2. வேலையாள் திருப்பம் (turn). ''பணி முறை மாற முந்துவர்'' (கம்பரா. ஊர்தேடு. 49). இன்று குழாய்த் தண்ணீர் பிடிக்க வேண்டியது யார் முறை? (உ.வ.). 3. தடவை. ''எழுமுறை யிறைஞ்சி'' (சீவக. 3052). 4. அடைவு. ''முறை முறை.......கழியுமிவ் வுலகத்து'' (புறநா. 29). 5. ஒழுங்கு. ''முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி'' (தொல். சி. பாயி.). 6. ஊழ். ''ஆருயிர் முறைவழிப் படூஉம்'' (புறநா. 192). 7. ஒழுக்கம். ''முறையிலோயைத் தென்புலத் துய்ப்பன்'' (கம்பரா. வாலிவதை. 117). 8. கற்பு. ''முகிழ் மயங்கு முல்லை முறைநிகழ்வு காட்ட'' (பரிபா. 15 : 39). 9. உறவு. ''பொருட்டு முறை யாதியின்'' (நன். 298). 10. மணஞ்செய் யுறவு. முறை மாப்பிள்ளை, முறைப் பெண், முறைகாரன். 11. உறவு முறைப் பெயர். ''பெரியாரை யென்று முறை கொண்டு கூறுர்'' (ஆசாரக். 91). 12. நேர்மை, முறைகேடு. 13. செங்கோல் நெறி. ''முறைகோடி மன்னவன் செய்யின்'' (குறள். 559). 14. நெறிமுறை. காக்கைப் பனம் பழ முறை (காக தாலீய நியாயம்). 15. நூல் வகுப்பு. பன்னிரு திருமுறை. 16. கட்டளை நிறைவேற்றுகை. முறை செய்வோர். 17. தன்மை. ''முத்தீப் பேணும் முறையெனக் கில்லென'' (மணி. 22 : 48). 18. உரிமை. ''முறைமை யென்பதொன் றுண்டு'' (கம்பரா. நகர் நீங்கு. 5).

ம. முர, க. முரெ, தெ. மொர.

முறைவன்=1. இறைவன். ''நான்மறை முக்கண் முறை வனுக்கே'' (பதினெ. பொன்வண். 52). 2. பாகன். ''மேலி யன் முறைவர் நூலிய லோசை'' (பெருங். உஞ்சைக். 44 : 79).

முறை—மிறை=வளைவு. ''மிறைக்கொளி திருத்தினனே'' (சீவக. 284).

மிறைக் கொளி திருத்துதல்=படைக்கலத்தின் வளைவு நீக்குதல். ''மிறைக் கொளி திருத்துவார்'' (சீவக. 2293).

மிறைக் கொளுவுதல்=படைக்கல வளைவு நீக்குதல். ''எஃக மிறைக் கொளீஇ'' (பு. வெ. 8 : 21).

ஒ. நோ : முண்டு—மிண்டு, முடுக்கு—மிடுக்கு.

முறு—மறு. மறுத்தல்=(செ. குன்றுவி.) 1. திருப்புதல். 2. திரும்பச் செய்தல். 3. மாற்றுதல். 4. தடுத்தல். ''மறுத்து மறுத்து மைந்தர் சார'' (கலித். 104). 5. தடை கூறுதல். (ஆட்சேபித்தல்). ''உடன்படல் மறுத்தல்.'' (நன். 11) 6. நீக்குதல். ''கொல்லான் புலாலை மறுத்தானை'' (குறள். 260).

7. இல்லை யென்னுதல். "அவர் மறுத் தகறல் காணு" (கம்பரா. மிதிலைக். 125). (செ. கு. வி.) இல்லாமற் போதல். "இப் பேறுதான் ஒருநாளுண்டாய் மற்றைநாள் மறுக்கையன்றிக்கே" (ஈடு, 2 : 7 : 7).

மறு—மறுப்பு=1. மறுக்கை. 2. எதிர்க்கை. 3. கண்டனம். 4. மறுவுழவு (யாழ்ப்.) 5. முன்றுழுத சாலுக்குக் குறுக்காக வுழுகை. (நாஞ்.)

மறுப்ப=ஓர் உவம வுருபு "மாற்ற மறுப்ப ஆங்கவை யெனாஅ" (தொல். உவ. 11).

மறுத்தருதல்=திருப்பல், மீட்டல். "மையற்ற படிவத்தான் மறுத்தர லொல்வதோ" (கலித். 15).

மறுத்தரவு=திருப்புகை, மீட்கை. "யாதொன்று மென்கண் மறுத்தர வில்லாயின்" (கலித். 81).

மறுத்தரவு—மறுதரவு=மீட்கை. "மறுதர வில்லாளை யேத்தி நாம் பாட" (சிலப். 24, பாட்டு மடை, இறுதி).

மறுக்க=திரும்பவும். மறுக்க நீ வரக்கூடாது. (உ. வ.)

மறுத்து=1. திரும்ப, மீள. "மறுத்தின்னா செய்யாமை மாசற்றார் கோள்" (குறள். 312). 2. மறுபடியும், "மறுத்துக் கேள்வி கொள்ள வேண்டாதபடி" (ஈடு, 1 : 3 : 3). 3. திரும்பவும், மேலும். "மறுத்து மின்னுமொன் றுரைத் திடக்கேள்" (அரிச். பு. சூழ்வி. 128).

மறுத்துரைத்தல்=தடை கூறுதல், எதிர்த் துரைத்தல். "மறுத்துரைப் பதுபோ னெஞ்சொடு புணர்த்தும்" (தொல். பொரு. 2).

மறுத்துப் போதல்=1. ஆவு கறவை நின்று போதல்.(W). 2. மரம் காய்ப்பு நின்று போதல். (W).

மறு—மறை=1. மறுப்பு. 2. எதிர்மறை. தொழாநிர் என்பது மறையின்றித் தொழுது என்று பொருள் தருமேனும் உணர்க. (மலைபடு. 231, உரை). 3 விலக்குகை. "பொய்ம்மை புலாற்கண் மறையுடைமை" (ஏலாதி. 6).

எதிர்மறு—எதிர்மறை.

மறுக்களித்தல்=1. மறுத்தல், 2. நோய் திரும்புதல்.

மறுக்களித்துப் பேசுதல்=தான் சொன்னதை மறுத்துப் பேசுதல். (உ. வ.)

மறுதலை=1. எதிர்க் கட்சி. "தன்னை மறுதலை பழித்த காலையும்" (நன். 53). 2. எதிரியின் கொள்கை. "மறுதலைக் கடாஅ" (தொல். மர. 105). 3. எதிர்ப் பொருள். "இன்மை யன்மை மறுதலை யென்னும் முப்பொருள்" (சி. போ. சிற். 2 : 1, பக். 34). 4. பகைவர். "மறுதலை சுற்ற மதித்தோம்பு வானேல்" (ஏலாதி, 16). 5. நிகர். "அரிமாவிற்கு மறுதலை போல்வா ரொருவர்" (திருக்கோ. 225, உரை). 6. இரண்டா முறை. மறுதலை இங்கு வராதே. (உ. வ.)

மறுதலைத்தல்=(செ. கு. வி.) எதிரிட்டுத் தோன்றுதல். "நாணமுத ஞன்கு மண்டி யொருசார் மறுதலைப்ப" (திருவிளை. வளையல். 23)—(செ. குன்றுவி.) மறுத்தல். "மறுதலைத் துரைக்கு மெல்லை" (அரிச். பு. நகர்நீ. 146).

மறுதலைக்காய்=பருவ விளைச்சற்குப் பின் காய்க்கும் காய் கறி முதலியன.

மறுதலைப் பெண்=மறுமனைவி. "அரவ மறுதலைப் பெண் கூட்டுவிக்கும்" (சினேந். 267).

(தொடரும்)

செய்யுளின்பம்

"பால் கறந்த மாத்திரையே யுண்பார்க்குச் சுவை பயக்கு மாயினும், அதனை வற்றக் காய்ச்சிக் கட்டியாகத் திரட்டிப் பின்னுண்பார்க்குக் கழிபெருஞ்சுவை தருதல்போலவும், முற்றின கருப்பங்கழியை நறுக்கிப் பிழிந்த மாத்திரையே அதன் சாற்றைப் பருகுவார்க்கு அஃதின்மை விளக்கு மாயினும் மேலும் அதனைப்பாகு திரளக்காய்ச்சிச் சருக்கரைக் கட்டியாக எடுத்துண்பார்க்கு ஆற்றவும் பேரின்பம் பயத்தல் போலவும், உரையும் நலம் பயப்பதோன்றேயாயினும் அதனைக் காட்டிலுஞ் செய்யுளாற் பெறப்படும் பயன் சாலவும் பெரிதாம்.

—மறைமலையடிகள்

(பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை பக். எ.)

சங்க இலக்கியத்தில் மணிகள்

[திரு. பி. எல். சாமி, பி.எஸ்ஸி.]

சங்க இலக்கியத்தில் மணிகளைப்பற்றிய சில செய்திகளைக் காணலாம். முத்தையும் மணிகளில் ஒன்றாகக் கொள்வர். இலக்கியத்தில் மணிகள் என்று சிறப்பாக அழைக்கப்படுபவை மாணிக்கம், நீலம், புட்பராகம், வைடூரியம், கோமேதகம் ஆகிய ஐந்து மணிகளாகும்.

"ஒருமைத் தோற்றத் தைவேறு வனப்பின்
இலங்குகதிர் விடூஉ நலங்கெழு மணிகளும்"

—சிலம்பு : ஊர்காண் காதை—*191-192.*

இந்தக் கற்களையே சங்கநூல்களில் 'இலங்குகதிர்த் திருமணி' என்று அழைத்தனர்.

"இலங்குகதிர்த் திருமணி பெறூஉம்
அகன்கண் வைப்பின் நாடு"

—பதிற்றுப்பத்து *6 : 8-19—20. 8 : 6-14, 15.*

சங்க நூல்களில் தமிழ்நாட்டில் கிடைத்த இரத்தினக் கற்களைத் 'திருமணி' என்று அழைத்தனர். மணி என்ற பெயர் பெரும்பாலும் மாணிக்கத்திற்கும் நீலத்திற்கும் பெயராக வழங்கியது. தமிழ்நாட்டில் கிடைத்த கற்களில் சிறந்தவை வைடூரியமும் நீலமும் ஆகும். தமிழ்நாட்டில் விளைந்த மணிக் கற்களைத் தவிரத் தமிழ்நாட்டுத் துறைமுகங்களுக்குப் பலவகை மணிக்கற்கள் கொண்டுவரப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி யானதைப்பற்றிப் பிறநாட்டார் எழுதியுள்ளனர். தொண்டி, முசிறி ஆகிய துறைமுகங்களிலிருந்து பலவகை மணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டதாகப் பெரிபுளூஸ் என்ற ஆசிரியர் எழுதி யுள்ளார். இந்த மணிகளில் பல தமிழ்நாட்டில் கிடைக்காதவை யாகும். இவை ஈழநாட்டிலிருந்து கொணரப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டவையாகக் கருதலாம். ஈழநாட்டில்தான் சிறந்த மணிகள் நிறையக் கிடைத்தன. மணிகள் கிடைத்த தீவையே மணிமேகலை மணிபல்லவம் என்று அழைத்துள்ளது. தமிழ் நாட்டில் கொங்குமண்டலத்திலேதான் நிறைய மணிகள் கிடைத்தன என்று ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்துள்ளனர். கோயமுத்தூர் மாவட்டத்தில் பாடியூர் என்ற ஊரில் உயர்ந்த மணிக்கற்கள் கிடைத்ததை உரோமர் கி. பி. முதல் நூற் றாண்டிலேயே குறிப்பிட்டுள்ளனர். இங்கு ஒருவகைக் கோமேதகக் கல் (Beryl) கிடைத்தது என்று தெரிகின்றது. ஆந்திரத்தில் பட்டிப்புரோலு தூபியில் (Bhattiprole Stupa) கோமேதக அணிகள் அகப்பட்டுள்ளன. பிளினி என்ற

ஆசிரியர் கோமேதகம் இந்தியாவில் கிடைப்பதாக எழுதியுள்ளார். இந்தக் கற்கள் கிடைத்த புன்னாடு என்ற ஊரைச் சங்ககாலத்தில் நன்னன் வென்றதாகக் கூறப்பட்டுள்ளது. மைசூருக்கு அருகே உள்ள இந்த நாட்டிலும் ஒருவகைக் கோமேதகம் கிடைத்து வந்தது. இங்குக் கிடைத்த கோமேதகம் நீல நிறமுடையதாக இருந்தது. இந்த நீலக் கற்களை (Acqua marine) சுரங்கத்தில் இருந்து எடுத்ததாகப் பிளினி கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் கிடைத்த மற்றொரு விலையுயர்ந்த மணிக்கல் வைடூரியமாகும். கௌடில்யர் எழுதிய அர்த்த சாத்திரத்தில் வைடூரியம் மலையமலையிலும் விந்திய மலையிலும் கிடைத்ததாக எழுதியுள்ளார். மேற்குத் தொடர்ச்சி மலையில் வைடூரியத்தில் ஒருவகை கிடைத்ததாகக் கருதுகின்றனர். காங்கயம் பகுதியிலும் கேரளத்தில் நெடுமாங்காடு என்ற வட்டத்தில் மணிக்கல் என்ற இடத்திலும் ஒருவகை வைடூரியம் (Chrysoberyl) கிடைத்ததாக ஆராய்ச்சியாளர் எழுதியுள்ளனர். புத்தபட்டர் (Buddha Bhatta) என்ற ஆசிரியர் எழுதிய நூலில் 'விடூர' மலையில் வைடூரியம் கிடைப்பதாகவும் அந்த மலை கொங்குநாட்டில் இருப்பதாகவும் எழுதியுள்ளார். கொங்குநாட்டில் வைடூரியம் கிடைத்ததென்பதற்கு இலக்கியச் சான்றும் உள்ளது. கி. பி. 225ஆம் ஆண்டில் பழைய கம்போடியா என்று கருதப்படும் (Funan) நாட்டிலிருந்து வைடூரியம் பிற நாடுகளுக்கு அனுப்பப்பெற்றதாக வெளி நாட்டுப் பயணியர் குறிப்புக் கூறியுள்ளது. இந்த வைடூரியம் தமிழ்நாட்டிலிருந்து சென்றதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

பூனன் என்ற பெயர் புனல்நாடு என்ற பெயரின் மாற்றமே என்று சிலர் கூறுவர். பூனன் நாட்டைத் தோற்றுவித்தவனே தமிழ்நாட்டிலிருந்து சென்ற ஓர் அரசன் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். வைடூரியம் கீழை நாடுகள் எங்கும் கிடைப்பதில்லையாதலால் தென்னாட்டிலிருந்து பூனன் நாட்டுக்குச் சென்றதாக ஆராய்ச்சியாளர் கூறுவர். வைடூரியம் என்ற பெயரைப்பற்றி ஆராய்ச்சி நடந்துள்ளது. வைடூரியம் என்ற பெயர் அதே பெயருடைய நாட்டின் பெயரால் வந்தது என்று சிலர் கூறுவர். பாணினியும் பதஞ்சலியும் வைடூரிய நாடு (விடூர நாடு) இருந்ததாகக் கூறியுள்ளனர். ஆனால், இந்த நாடு இருந்த இடத்தைப்பற்றிக் குழப்பமான செய்திகளையே கூறியுள்ளனர். டாலமி என்ற வெளிநாட்டு ஆசிரியர் "ஒருடையான்" (Oroudian) என்ற மலையில் வைடூரியம்

கிடைத்தாக எழுதினர். இந்த மலை சாத்புரா மலைத்தொடரில் இருந்ததாக எழுதினர். வைடூரியம் கிடைத்த இடத்தை யெல்லாம் வைடூரிய மலை என்றழைத்ததால் மயக்கம் ஏற்பட்ட தாகத் தெரிகின்றது. வைடூரியம் என்ற வடமொழிப் பெயர் 'வெளூர்ய(ம்)' (Velaurya) என்று பாலி மொழியில் வழங்கும் பெயரிலிருந்து வந்ததாக அறிஞர்கள் கூறுகின்றனர். வைடூரியம் என்ற பெயர் 'வேளூர்' (வேலூர்) என்ற தமிழ்ப் பெயரிலிருந்து வந்ததாக T. Masters என்ற அறிஞர் கருதினர். பாலி மொழிப் பெயரான 'வெளூர்ய(ம்)' என்பது தமிழிலிருந்து வந்திருக்கலாம் என்று கருத இடமிருக்கின்றது. பழைய அக்கேடிய மொழியில் (Akkadian) வைடூரியத்தை 'புரல்லு' (Buralle) என்று அழைக்கின்றனர். இப்பெயர் கி. மு. எட்டாம் நூற்றுண்டிலேயே வழங்கியது என்று கூறுவர். இப் பெயரே பிற்காலத்தில் Beryl என்று மேல்நாட்டு மொழிகளில் மாறி வழங்கியது. கிரேக்க மொழியில் Beeryllos என்று வழங்கியது.

கிரேக்க மொழிப் பெயர் 'வெளூர்ய' என்ற பாலி மொழிப் பெயரிலிருந்து அல்லது 'வைடூர்ய' என்ற வடமொழிப் பெயரி லிருந்து வந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் எழுதினர். தமிழகத்திலிருந்து வெளிநாட்டுக்குச் சென்ற வைடூரியத்தின் பெயர் தமிழிலிருந்து சென்றிருக்கலாம் என்று கருத வேண்டும். 'வெளூர்ய' என்ற பாலி மொழிச் சொல் வெருகு என்ற சங்க காலத்துச் சொல்லிலிருந்து வந்ததாகத் தெரிகின்றது. வைடூரியத்தைத் தற்கால வணிகர் 'பூனைக்கண்' (Cat's-eye) என்றழைப்பர் பூனையின்கண் போன்று பச்சையாகவும் பூனைக் கண்ணின் நடுவில் காணப்படும் செங்குத்தான வெள்ளைக் கோடு போல வெண்மையான கோடு உடையதாகவும் இந்தக் கல் காணப்படுமென்பதால் பூனைக்கண் என்று பெயரிடப் பட்டது. ஆனல், இந்தக் கல்லை இன்னும் பொருத்தமாய் 'வெருகுக்கண்' என்றழைக்கலாம். வைடூரியத்தைத் திரு விளையாடற் புராணத்தில் 'வெருகின் கண் நிறத்ததாய்' என்று கூறியதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். வைடூரியத்தின் நிறத்திற்கும் தோற்றத்திற்கும் வீட்டுப்பூனையின் கண்ணைவிடக் காட்டுப்பூனையின் கண்ணே சிறப்பாகப் பொருத்தமாகும் என்பதை உணர வேண்டும். வெருகின் கண்ணைப் பச்சை என்று அகநானூறு கூறியுள்ளது. "குவியடி வெருகின் பைங்கண் ஏற்றை" (367) என்று வெருகின் பசிய கண் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கல் பச்சையாக இருப்பதால் படிகப் பச்சை என்று இக்காலத்தில் அழைப்பர். 'வெருக்குக் கண்' என்ற பெயர் நாலடியாரில் வருகின்றது.

"விருப்பிலார் இல்லத்து வேறிருந்து உண்ணும்
வெருக்குக்கண் வெங்கருனை வேம்பாகும்" —நாலடியார் 210.

வெருகின் கண்ணை ஒப்பிட்டுக் கூறும் வழக்கம் நாலடியாரி லிருந்து தெரிகின்றது. வெருகின் கண்ணை வைடூரியத்திற்கு ஒப்பிடடுத் திருவிளையாடற் புராணம் கூறியதுபோலச் சங்க காலத்திலேயே வைடூரியக் கல்லை வெருகின் கண்ணிற்கு ஒப்பிட்டுப் பெயர் வழங்கியிருக்கலாம். முத்திற்கு வெருகின் கண்ணை ஒப்பிட்டுக் கூறிய அகநானூற்று வரியை இது சார்பாகக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

"வெருகிருள் நோக்கி அன்ன கதிர்விடு
பொருகாழ் முத்தம் இடைமுலை விளங்க" —அகம், 73.

வெருகு இருளை நோக்கும்போது கண்ணின் நடுவில் கோடு இருக்காது. இரவில் கண் இரப்பை நன்கு திறந்திருக்கு மாதலால் கண் விழி உருண்டையாக முத்துப்போல இருக்கும். முத்தில் வெண்மையைத் தவிரப் பிற நிறங்களும் உண்டு. வெருகு இருளில் நோக்கிய கண்ணை முத்திற்கு ஒப்பிட்டது போலச் சஙககாலத்திலேயே வெருகு பகலில் நோக்கிய கண்ணை வைடூரியக்கல்லிற்கு ஒப்பிட்டிருப்பர். வெருகு பகலில் நோக்கும் கண் பச்சையாகவும் நடுவில் வெண்மையான கோடுடைய தாகவும் இருக்கும். இதைக் கருதியே திருவிளையாடற்புராணம் "வெருகின்கண் நிறத்ததாய்" என்று கூறிற்று. வெருக்குக் கண் என்று நாலடியார் கூறிற்று. வெருகின்கண், வெருக்குக் கண் என்ற பெயர்களே வைடூரியத்தின் பெயராக முற்காலத்தில் வழங்கியிருக்க வேண்டும். வெருத என்ற பெயரின் அடிப்படை யாகவே பாலி மொழிப் பெயரான 'வெருள்ய' என்பது தோன்றியதாகத் தெரிகின்றது. வெருகு என்ற பெயரே வெரு (வெருள்) என்ற வேர்ச்சொல்லடி வந்தது. வெருகுக்கண், 'வெருள்ய' என்ற பெயர்களில் அடிப்படைச் சொல் 'வெரு' என்பதாகும். வெருள் என்றும் கொள்ளலாம். "வெருக்கு விடையன்ன வெருள் நோக்குக் கயந்தலை" என்று வரும் புறநானூறு (324) வரியில் வெருள்நோக்கு கூறப்பட்டுள்ளது. 'வெருள்பிணை போல நோக்கம்' என்று பழமொழிநானூறு (13) கூறியுள்ளது. பாலி மொழிப் பெயரான 'வெருள்ய' என்பது வெருள்நோக்கு உடைய வெருக்கின்கண் என்ற பெய ரடிப்படையில் தோன்றியது என்று கருதுவதே மிகவும் பொருத்தமானது. வெருள் என்ற தமிழ்ச்சொல்லும் 'புருள்' என்ற அக்கேடியப் பெயரும் நெருங்கிய ஒலியொப்புமை யுடையதைக் காணலாம். பூனைக்கண் (Cat's-eye) என்ற

மேல்நாட்டு மொழிகளில் வழங்கும் இன்றைய பெயர்கூட 'வெருக்குக்கண்' என்ற தமிழ்ப் பெயரின் மரபாகவே பிற்காலத்தில் தோன்றியதெனத் தெரிகின்றது. வைடூரியம் என்ற பெயருக்குப் பொருத்தமான வேர்ச்சொல் விளக்கம் தமிழ் மொழியில் காணப்படுவதாலும், வைடூரியக்கல் தமிழ் நாட்டில் சிறப்பாகக் கிடைத்ததாலும், தமிழகத்தில் கிடைத்த இந்தக் கல் பண்டைக்காலத்திலேயே வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டுச் சிறப்புப் பெற்றதாலும் வைடூரியம் என்ற இதன் வடமொழிப் பெயர் தமிழ்மொழியிலிருந்து பாலி மொழிவழி சென்றது என்று கூறலாம். கொங்குநாட்டில் மணிகள் கிடைத்ததாகப் பதிற்றுப்பத்துக் கூறியது பெரும்பாலும் வைடூரியத்தையே குறித்ததாகலாம். மணிகளில் சிறந்ததைத் 'திருமணி' என்றழைப்பது சங்கநூல் வழக்காகும். கதிர்விடும் மணியையே திருமணி என்றழைத்தனர். 'கதிர்த் திருமணி' என்றழைப்பதைக் கவனிக்க வேண்டும். முத்தைக்கூட 'கதிர்விடு முத்தம்' என்று கூறியிருப்பதைக் காணலாம். இந்தக் கதிர் என்பதையே மணிநூலார் 'Vitreous' என்று கூறுவர்.

(தொடரும்)

தமிழ் நாட்டு மணியும் முத்தும்

நவமணிகளில் இந்திய நாட்டு வைரமும், முத்தும் உலகப் புகழ்பெற்றவை. தமிழ் நாட்டின் பெருமையை மிகப் பழங்காலம் முதலே இந்த நாட்டில் தோன்றிய முத்துக்கள் பிற நாடுகளுக்கெல்லாம் அறிவித்து வந்தன. தென்பாண்டி நாட்டில் கொற்கைத் துறையில் எடுத்த முத்துக்கள் எகிப்து, ரோம் முதலிய நாடுகளுக்குச் சென்று, வாணிகத்தால் அந்நாடுகளைத் தமிழ் நாட்டோடு தொடர்பு படுத்தின. இங்கிலாந்து மன்னரது மணிமுடியிலே விளங்கும் நமது நாட்டுக் கோகினூர் என்னும் வைரம் பெரிய வரலாற்றை உடையது.

—டி. எஸ். வைத்திய நாதன்
நவமணிகள். ப. 12.

கன்னடத்தில் கன்னித்தமிழ்

[பன்மொழிப் புலவர். இரா. மதிவாணன், எம். ஏ.]

இலக்கண உறவு:

பழங்கன்னடத்தில் 9 ஆம் நூற்றுண்டுக்கு முன்பே மிகுந்த சொல்வளம் மறைப்புண்டது. கன்னட இலக்கிய வரலாற்றில்[1] மறைந்த சில சொற்கள் நினைவு கூரப்படுகின்றன. 'அற, பொழ்து, நேசறு, ஈபகெய, சப்தகனு கன்னட ரூடியல்லித்து முந்தெ சம்ஸ்கிருத பிரவாகத் மூலக கண்மறெ யாதவு.' பொருள்—அறம், பொழுது, ஞாயிறு இவ் வகைச் சொற்கள் கன்னட வழக்கிலிருந்து வடமொழித் தாக்குதலால் கண்மறை யாயின. (கண்மறையாதல்—மறைதல்). பழங்கன்னடத்துக்கு முந்திய சொல்வளம் முழுதும் தமிழே என்பதற்கு இச்சொற்கள் சான்ருகின்றன. இருண்ட காலத்திற்குப்பின் இலக்கியத் தோற்ற காலத்திலிருந்து இலக்கண உறவைக் கணிக்கலாம்.

கன்னட நுடிகட்டு:

கன்னட நுடிகட்டு என்ருல் கன்னட இலக்கணம் என்று பொருள். நொடி என்னும் தமிழ்ச்சொல் நுடி எனத் திரிந் துள்ளது. நுடிகட்டு—சொற்கட்டு, மொழியின கட்டமைப்பு. தமிழில் நொடி எனும் சொல் ஓசை, ஒலி, சொல், மொழி, செய்யுள், விடுகதை எனப் பொருள்படும். (ஒ. நோ.) நொடி— 1. ஓசை; அமைக்கண் விடுநொடி (அகம். 47). 2. மாத்திரை; கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை (தொல். எழுத். 7). 3. சொல்லுதல்; சென்றது நொடியவும் விடான் (மலைபடு. 545). 4. செய்யுள்; சடகோபன் நொடியாயிரத்திப்பத்தும் (திவ். திருவாய். 10 : 5 : 11). 5. மொழி; நொடி பயிற்றுவாள் (சீவக. 363 உரை). 6. விடுகதை; நொடிக்கதை, நொடி யவிழ்த்தல், பிசியும் நொடியும் (பெருங். உஞ்சை. 33 : 175). எனவே, சற்றெப்ப ஐந்திலக்கணமும் உணர்த்தவல்ல நுடிகட்டு எனுஞ் சொல்லை இலக்கணத்தின் மறு பெயராகக் கன்னடியர் ஆளுவது பாராட்டத் தக்கதாகும். நுடிகட்டு எனுஞ் சொல்லைச் சமணரும் வடமொழி பயின்றவரும் மிகுதியாக ஆளவில்லை. பழங்கன்னடத்திலிருந்த அரிய இலக்கியங்களைக் கற்றிருந்த மல்லிகார்ச்சுனன் என்ற சமணப் பெரியார், நம் முன்னேர் சங்க இலக்கியங்களைத் தொகுத்தது போன்றே, 'சூக்தி சுதார்ணவம்'

---

1. கன்னட சாஹித்ய இதிகாச. (பக். 11)

என்னும் பெயரில் பழங்கன்னட இலக்கியத் தொகுப்பை வெளியிட்டார். இவ் விலக்கியங்களைக் கற்ற இவருடைய மகன் கேசிராசன் சப்தமணி தருப்பணம் (இலக்கண மணிக் கண்ணாடி) என்னும் கன்னட இலக்கண நூலை இயற்றினார். இதுவே கன்னடத் தொல்காப்பியம் என்று பாராட்டப்படுகிறது.

சப்தமணி தருப்பணம் (கன்னடத் தொல்காப்பியம்):

இந் நூலாசிரியரான கேசிராசன் 13 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். கேசவன், கேசவதேவன் என்றழைக்கப்பட்ட கவி கேசிராசன் சமணத்துறவியெனினும் சேனாவரையரைப் போன்று படைத்தலைவராகவும் இருந்திருக்கிறார் என்பது "யாதவ கடகோபாத்யாய" என்னும் அடைமொழியால் தெரிகிறது.[2] கன்னடம், பிராகிருதம், வடமொழி ஆகிய மும்மொழிப் புலமை மிக்கவர். தொல்காப்பியரைப் போன்றே இவர் தம் நூலை ஒன்பது இயல்களாகப் பகுத்துள்ளார். சந்த யாப்பிலான நூற்பாக்களுக்குத் தாமே பொழிப்புரையும் தந்திருப்பது ஒரு தனிச் சிறப்பாகும். திரு. பர்னல்[3] எனும் மேனாட்டறிஞர் கேசிராசனை ஐந்திர இலக்கண நெறியாளருள் ஒருவர் என்கிறார். இக் கூற்றுக்குச் சான்றாக இவர் ஐந்திரச் சார்பிலக்கணமான காதந்திர இலக்கண நூலிலிருந்து மேற்கோள்களை எடுத்தாள்கிறார். இவருடைய தாய் வழிப்பாட்டன், தந்தை, தாய்மாமன் ஆகியோர் பெரும்புலவர்களாக விளங்கிய சமணப் பெரியார்கள். கடவுள் வாழ்த்தாக நாமகளை (வாக்தேவி) வணங்குகிறார். பவணந்தி நான்முகனைத் தொழுது எழுத்ததிகாரத்தைத் தொடங்குவது நாமறிந்ததே. கேசிராசன் இயற்றியவையாகக் கூறப்படும் 'சோழ பாலக சரிதெ' முதலிய ஐந்திலக்கியங்கள் கிடைக்கவில்லை.

சப்தமணி தருப்பணத்துக்கு முந்தி எழுதப்பட்ட கன்னட இலக்கண நூல்கள் வடமொழியில் இயற்றப்பட்டுக் கன்னடத்தில் மேற்கோள்கள் மட்டும் காட்டப் பட்டனவாயிருந்தன. தாய்மொழிப்பற்றும் துணிவும் மிக்க கேசிராசன் கன்னட இலக்கணத்தைக் கன்னட மொழியிலேயே எழுதியிருப்பது கன்னட இலக்கிய வரலாற்றில் மிகக புதுமையாகப் பாராட்டப்படுகிறது. கேசிராசன் தமிழ் கற்றிருந்தால் கன்னட இலக்கணப் போக்கு மேலும் மேம்பட்டிருக்கும் எனலாம்.

---

2. நாகவருமனின் காவ்யாவலோகன முன்னுரை. (பக். 9.)—நரசிம்மாச்சார்.

3 The Aindra school of Sanskrit.

தம் பாயிரவுரையில் பழங்கன்னட இலக்கண ஆசிரியர்கள் வேண்டிக் கொண்டதற்கிணங்க இந் நூலை இயற்றியதாகவும், குற்றமுளதேல் திருத்திக் கொள்க, குணமுளதேல் ஏற்றுக் கொள்க எனவும் கூறுகிருர். தமிழ் பயிலாவிடினும் தமிழிலக்கண நெறிக்குப் புறம்பான முந்தைய கன்னட இலக்கண நெறிகளைக் கண்டித்திருக்கிருர். இஃது எவ்வாறு அவரால் இயன்றது எனின் தமிழிலக்கண நெறியும் கன்னட இலக்கண நெறியும் ஒன்ருக இருப்பதே ஆகும்.

இன்றிவர் என்னும் எண்ணியற் பெயருக்கு (தொல். சொல். 165) உரையாசிரியர்கள் இளம்பூரணரும், சேனவரையரும் இன்றிவர்—இத்துணையர் என்னும் பொருட்டாகலாம் என்றும், இத்துணையர் என்றே பொருள் என நச்சரும் தெய்வச் சிலையாரும் உரை வகுத்துள்ளனர். இச் சொல் பழங் கன்னடத்தில் இனிது (initu), இனிபர் என்று வழங்கும்.

கேசிராசனுக்கு முன்பு இலக்கணம் வகுத்த நாகவருமன்[4] தன்னுடைய சப்தஸ்மிருதியில் ‘இனைத்து’ (இத்துணை அளவினது) எனப் பொருள்படும் இனிது (initu) எனும் சொல்லை, இது + நிது = இனிது எனப் பொருந்தாப் புணர்ப்பாகக் காட்டியுள்ளார். இதே போன்று அன்னவாறு (அப்படி) என்று பொருள்படும் அன்து எனும் கன்னடச் சொல்லை அது + ன்து = அன்து என்றும், அன்று (அந்நாள்) எனப் பொருள்படும் அந்து எனும் கன்னடச் சொல்லை அது + ந்து = அந்து என்றும் மனம் போன போக்கில் புணர்த்திக் காட்டியுள்ளார். இவை பொருந்தா என உணர்ந்த கேசிராசன் துணிவுடன் இவற்றைத் தம் நூலுள் சேர்க்காமல் விட்டு விட்டார்.

எண்ணுத்திணை விரவுப்பெயர் :

பழங்கன்னட இலக்கண அமைதியைத் தாமாகவே உய்த்துணர்ந்து புதுஇலக்கண நெறிகளைப் படைத்துக் கூறியிருப்பதும் கேசிராசனின் தனித்தன்மையைக் காட்டுவனவாகும். இதற்குச் சான்ருகத் திணை, பால் வழுவமைதிக்கு இவர் தரும் விளக்கத்தைத் தொல்காப்பியர் பவணந்தியார் கருத்துகளோடு ஒப்பிட்டுக் காணலாம்.

பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே'' (தொல். சொல். 51)

---

4. சப்தஸ்மிருதி—நூற்பா. 72, 79, 80.

செய்யுளில் பெரும்பாலும் எண்ணுத்திணை விரவுப்பெயர் அஃறிணை முடிபு கொள்ளும் என்று தொல்காப்பியர் கூறுகிறார். ஆனால், பவணந்தியார் திணையும் பாலும் விரவி வரும்போது சிறப்பு, மிகுதி, இழிபு ஆகிய காரணியங்களால் ஒருமுடிபு கொள்ளும் என்கிறார்.

"திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்
மிகவினும் இழிபினும் ஒருமுடி பினவே" (நன்னூல். 374)

திங்களும் சான்றோரும் ஒப்பர். (சிறப்பான் உயர்திணை முடிபு பெற்றது.) மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா. (இழிபான் அஃறிணை முடிபு பெற்றது.)

திணையும் பாலும் விரவி வரும்போது சிறப்பு, இழிவு, மிகுதிப் பொருள்களுக்கு இடமில்லை என்பதும், விரவிவரும் சொற்களின் ஈற்றில் நிற்கும் சொல்லின் திணைக்கு ஏற்ப, பலர்பால் அல்லது பலவின்பால் வினைமுற்றே முடிபாக வரும் என்பதும் கேசிராசனின் கொள்கை.

எ-டு.1. சேனையும் அரசியும் அரசனும் பந்தர்.
(பந்தர் - வந்தனர்)

2. அரசனும் அரசியும் சதுரங்கபலமும் பந்தவு.
(சதுரங்கபலம்—நாற்படை. பந்தவு-வந்தன.)

3. ஆனையும் சேனையும் அரசியும் அரசனும் பந்தர்.

சிறப்பு, இழிவு, மிகுதி ஆகியவை கருதப்படாத போது எவ்வாறு முடிபு கொள்ளும் என்னும் சூழலில் கேசிராசனின் இலக்கணம் பொருந்துகிறது எனலாம்.

மொழியின்றி வாழ்வில்லை

ஒருமொழி வழக்கிற்கு அம் மொழிக்குரிய மக்கள் இன்றி யமையாதவரா யிருத்தல் போலவே, அம் மக்களின் நாகரிக வாழ்க்கைக்கும் அவர்தம் மொழி இன்றியமையாததாகு மென்பது பெறப்படும். மக்களை விட்டு மொழியும் மொழியை விட்டு மக்களும் உயிர் வாழ்தல் சிறிதும் இயலாது.

—மறைமலையடிகள்
(மறைமலையடிகளார் உரைமணிக் கோவை பக். 61-62)

ஒளிநெறி ஒன்பது

[டாக்டர். சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.,
தமிழ்த்துணைப் பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மயூரம்]

கவிஞனின் ஒளிநெறி :

கவிஞன் தன் ஆழ்ந்த உள்ளத்துக் கருத்துகளை வெளிப்படுத்தற்குத் தன் கவிதையை உயர் கருவியாகக் கையாள்கின்றான். அதற்கு அவன் அமைக்கும் பின்னணி கற்பனை முதலிய சீரிய அமைப்பு. அந்தப் பின்னணியில் அவன் எழுதும் ஓவியமாகக் கவிதை எழுகின்றது. அந்த ஓவியம் உணர்த்தும் உண்மைகள் எண்ணற்றவை. காண்போர் கருத்தில் ஊடுருவிச் சென்று நெறிகாட்டுவனவாகிய ஓவியங்கள் காலவெள்ளத்தில் அழியாது நிற்கின்றன. அவற்றைக் கண்டு உறவு கொள்ளுதற்கேற்ற உள்ளப் பாங்குடையோர் உலகிடைச் சிலரே யாவர். உலகியல் வாழ்வு ஒன்றே கருதிப் பொருள் வேட்டையாடி மாய வாழ்வு வாழும் மனம் உடையோர்க்கு இத்தகைய விழுமிய உணர்வு வேட்கை உண்டாவதற்கு வாய்ப்பில்லை. வாழ்வின் மேலோட்டமான நிலைகளைத் தம் கூர்த்த மதியால் நுனித்துணர்ந்து நீக்கி, அடித்தளத்து மெய்ம்மைகளை நோக்கி உணரும் தூய உணர்வுடை மாந்தர்க்கே இந்த அநுபவம் உண்டாகின்றது. கவிஞன் உணர்த்திய பொருளாழம், அவன் காண விரும்பிய உலகு, அவன் காட்ட விழைந்த இனிய நறுங்காட்சி, அவன் உணர்த்த முற்பட்ட ஒளிநெறி ஆகிய அனைத்தும் திறன் ஆய்வாளன் உணர்த்த முன்வரும் செய்திகள். காய்தல் உவத்தல் அகற்றித் திறன் ஆய்வாளன் இந்த நுண்ணிய உலகிற்குள் புகுந்து நலம் காண்கின்றான்.

முத்துக் குளிப்போனும் கவியுள் மூழ்குவோனும் :

ஆழ்கடலில் மூச்சு அடக்கிக் கொண்டு முத்துக் குளிக்க மூழ்குகின்றான் கடல் மூழ்கும் கலைகற்ற கலைஞன்; அவன் கடல் ஆழத்திற்கோ, நீர்ப்பரப்பிற்கோ, சுறாமீனினங்களுக்கோ, கவலைப்படுவதில்லை. அவனுடைய நோக்கம் எல்லாம் ஒளி முத்துக்களே. இறைவனுடைய அருட்படைப்பாகக் கடலடியிற் கிடக்கும் முத்துச் சிப்பிகளையே கருதி ஆராய்கின்றான்; கைக்கொள்கின்றான்; வெளிக் கொணர்கின்றான். வெளியுலகம் வியக்கின்றது. இவ்வளவு விலை மதிப்பற்ற முத்துக்களை—நீலக் கடலின் கோலமடியிலே கொஞ்சுகின்ற இயற்கைச் செல்வங்களை உலகறியக் கொணர்ந்த அக் கலைஞனை உலகம் புகழ்கின்றது.

திறன் ஆய்வாளன் ஒருவனும் இத்தகு அரிய முயற்சியையே மேற்கொள்கின்ருன். கவிஞன் படைத்த கவிதை என்ற ஆழக் கடலிலே சிந்தனையை அடக்கிக் கொண்டு மூழ்கித் துழாவு கின்ருன்; உலகியல் இடர்களை மறந்து தன்னை இழந்து கவிதை யோடு ஒன்ருகின்ருன். அங்கே படைப்பாளன் சீரிய உணர்வு களைக் காண்கின்ருன்; கருத்துள் ஏந்துகின்ருன்; வெளிப்படுத்து கின்ருன். உலகம் நெறிகண்டு உய்கின்றது. சுருங்கக் கூறினல், கால நோக்கமின்றி, வேறு பயனடிப்படை யின்றி, நெறி காட்டுதல் ஒன்றே தானய் நின்று. தான் படைத்துவிட்டுச் சென்ற கருத்துப் பேழைகளாம் கவிதைகளைக் கவிஞன் நெறி யிலே சென்று வெளிப்படுத்துகின்ருன் திறன் ஆய்வாளன் என்று கூறலாம்.

நெறிவிளக்கும் நெய்தற் கலி :

சங்க இலக்கியக் கவிதைகள் ஒவ்வொன்றும் உணர்ச்சி மாளிகைகள்; கற்பனைப் பூங்காக்கள்; கருத்து நிலா முற்றங்கள்; எழுச்சித் திரையிட்ட எழில் மேடைகள்; அணி ஒளி காட்டும் வானத்து வண்ணச் சிலைகள். எல்லாவற்றிற்கும் மேலாக, வாழ் வியல் உண்மைகளை வடித்து வைத்துள்ள பாட்டுச் சுரங்கங்கள். அவற்றை ஆழ்ந்து ஆழ்ந்து சென்ருல் வெளிப்படும் விழுப் பங்கள் பலர்; விளங்கும் நெறிகள் பல. இதோ ஒரு நெறி விளக்கம்; நெய்தற்கலியின் ஒளி வீச்சு.

கற்பனைப் பின்னணி :

களவொழுக்கக் காலத்து நிகழ்ச்சியாகக் கற்பனை. தலைவன் தலைவியோடு இதயம் கலந்து களவு ஒழுக்கத்தின் கருத்துப் பரிமாறி வாழுகின்ற காலப்போது. உற்ருரும் பெற்ருரும் அறி யாமல், ஊரோரும் பாரோரும் உணராமல், தம்முளே தாமாகக் கலந்த கேண்மையராக இணைந்து வாழும் இன்ப ஒழுக்கம். உயிர்த்தோழி ஒருத்தி மட்டுமே இந்த உயிர்க்காதலை உணர் வாள். "ஒன்றித் தோன்றும் தோழி" —என்று தொல்காப்பியம் கூறும் இயல்புடையவளாதலின், தோழி யறியாத களவு இல்லை; அவள் அறியாத உளவு இல்லை. நாட்கள் கழிகின்றன; நம்பியும் நங்கையும் நயப்புறு களவுப் புணர்ச்சியும் நாட்கழிவில் கழி கின்றது. இந் நிலை நீடிப்பது ஏலாது என்று அறிகின்ருள் தோழி. அவள் பண்பறிந்த பாங்கி. களவு கற்பாக மலராத வரையில் கவலை அவளுக்கன்ருே? 'பலர் அறி நன்மணம்' நிகழ வேண்டுமே என்பது அவள் நெஞ்சக் கவலை. தலைவன் பேராண்மையன்; பெருங்களிற்றியல்பினன். அறிவு சான்ற

அருமையன்; அறம் சான்ற பெருமையன்; நீதி வழுவா நேரியன். ஆதலின் அவனுடைய அடிமனத்திற்கு இச் செய்தியை உணர்த்த முற்படும் தோழிக்கு மிக்க இடர் இல்லை. "ஒரு கோடி காட்டினாற்போதும்; ஒரு கோடி" உணர்ந்து கொள்ளும் ஒள்ளியன் தலைவன்; "பெருமையும் உரனும் ஆடூஉ மேன" என்ற பழந்தமிழ் இலக்கணப்படி யமைந்த பண்பாளனாயிற்றே! இவ்வளவு சீரிய ஏந்தல் அன்புக் காதலிலே தன்னை மறந்து விட்டிருக்கின்றான்; "ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை, அரிது அரோ, சென்ற இளமை தரற்கு" என்ற அடிப்படையில் இளமை நலம் மீதூர இன்ப வொழுக்கத்தை நீட்டித்து வரும் நிலை எய்துகின்றான். தெளிவு ஊட்ட வேண்டிய நிலை இத் தெரிவைக்கு (தோழி) வருகின்றது. களவு ஒழுக்கம் தலைப்பட்ட தலைவனை ஒருநாள் கண்டு பேசுகின்றாள். இப்படி ஒரு பின்னணியை அமைத்துக்கொண்டு பேசத் தொடங்குகின்றான் கவிஞன். ஆம்; அவன் குரல் இப்போது பெண்ணின்குரல். தோழியின் வாய்மொழியாகத் தூயவனின் கவிதைப் படைப்புத் துலங்குகின்றது. "தலைவன் தெருளாதவனைத் தெருட்டி வரைவு கடாயது" என்ற துறைக் குறிப்புடன் விளக்குகின்றது கவிதை.

பாட்டின் பொருளமைப்பு :

முதற்கண் தலைவன் வாழும் நெய்தல் நிலத்தை நினை வூட்டித் தொடங்குகின்றாள் தோழி. கடற்கரை; வீசியெழும் அலைகள் புரள்கின்றன. மணல் கருமை நிறமிட்டுக் கிடக் கின்றது. கழிமுள்ளி, தில்லை ஆகிய முள்ளுச் செடிகள் மணல் மேட்டில் கிடக்கின்றன. காற்று மேலும் மேலும் வீசி மேடிட்டுக் கிடக்கும் கடற்கரைப் பகுதி. அடர்ந்து கிடக்கும் தாழம்புதர். அத் தாழம் புதர்களின் இலைகள் வாள்போன்று தொங்கு கின்றன. இடையே தாழம்பழங்கள். வெண்மையான தாழம் பூக்களும் மலர்ந்து வண்ணம் காட்டுகின்றன. அப் புதர்களிலே இப்படிப்பட்ட நெய்தற் சூழ்நிலை தலைவன் வாழும் சூழ்நிலை. இதனை உணர்த்துகின்றாள் தோழி. இதனுடன் விட்டிருந்தால் இக் கவிதைப் பகுதி சிறப்புற்று விளங்குமா? இதற்குமேல் உள்ளத்தை உயர்த்தத் தக்க உண்மைப் பொருள் ஒன்றை உவமையாக்கிச் சுட்டுகின்றாள். கல்லால மரத்தின் அடியில் ஆசிரியத் திருக்கோலம் பூண்டு அமர்ந்திருக்கும் தென்முகக் கடவுள் திருக்காட்சியைச் சுட்டுகின்றாள்; தாமிருக்கும் அவ்வால மரத்தின் முன்னே நீர் நிறைந்த குண்டிகையை வைத்து அவர் அமர்ந்திருப்பது போன்று தாழை காட்சி தருகிறது என்கின்றாள் அவள். உயிர்க்கொலை சூழ்கின்ற நாரை முதலிய பறவைகள் தாழைப்பூ மலர்ந்திருப்பது போன்று உள்ள காட்சியையும்

இணைத்து உரைத்தாள்; இத்தகைய நீர்த் துறையை உடைய தலைவனே கேள்'' என்று தொடங்கினாள்.

உள்ளத்தை உயர்த்திய பின்னர், அந்த உயர்வு கெடாத வகையிலே மேலே மேலே சிந்தனைக்கினிய செய்திகள் பல வற்றை, வாழ்வில் ஒளி நெறியாகக் கொண்டு உயரத்தக்க ஒன்பது உண்மைகளைக் கூறிக்கொண்டே வந்து பண்பட்ட மனத்திற்குப் பாங்கமைந்த உணர்ச்சி விருந்து படைக்கின்றாள் பாங்கி. கவிஞன் அடிமனத்து நெறிகாட்டும் உணர்ச்சி பீறிட் டெழுகின்றது. தொடக்கத்தில் இறையுணர்வு காட்டி, அந்த இறையுணர்வு வாழ்வில் நின்று நிலைத்தற்கேற்ற ஒன்பான் ஒளி நெறி உண்மைகளைச் சுட்டி வரையறைப் படுத்துகின்றது கவிதை. ''இழுமென் மொழியால் விழுமியது பயக்கும்'' உயர் கவிதைப் பண்பு இங்கு ஒளிக்கதிர் வீசுகின்றது

இடைப்பகுதியில் இனிமை:

(1) ஆற்றுதல் (2) போற்றுதல் (3) பண்பு (4) அன்பு (5) அறிவு (6) செறிவு (7) நிறை (8) முறை (9) பொறை ஆகிய ஒன்பது உண்மைகளைப் பாட்டின் இடைப்பகுதி பாங்குறச் சுட்டுகின்றது. இவற்றுள் முதற்கண் இரண்டும் செயல் வடிவின; பின்னவை ஏழும் பண்புகள். இவற்றை இந் நிரல் பெற அமைத்த நெய்தற்கலியாசிரியர் நல்லந்துவனாரது நல்லிசைப் புலமை நவில்தொறும் நயம் மிகுவிப்பது. "ஒளி நின்ற கோணங்கள் ஒன்பது'' என்று உவந்து பாராட்டுமாறு இவ்வுண்மைகள் இங்குக் கற்போர் மனத்தில் மெய்ம்மை ஒளியை வீசுகின்றன. இனி இவற்றது விளக்க நெறி நின்று பொருளாழம் துய்க்கலாம்.

வருத்தமுற்றவர்க்கு உதவுதல் என்பதே ஆற்றுதல் என்று கூறப்படும்; கூடினரைப் பிரியாதிருத்தல் என்பதே போற்றுதல் ஆகும். பாடறிந்து ஒழுகுவதே பண்பு; தன் சுற்றத்தாரைத் தழுவி ஒழுகுகின்றமையே அன்பு; அறிவில்லாதார் கூறும் சொற்களைப் பொறுத்துக் கொள்ளலே அறிவு; கூறியது மறுக்காத இயல்பே செறிவு; தாம் கேட்ட மறை பிறர் அறியாது ஒழுகுவதே நிறை; கண்ணோட்டம் கொள்ளாமல் செலுத்துவதே முறை எனப்படும் செங்கோன்மை; பகைவரைக் காலம் வருந் துணையும் பொறுத்திருத்தலே பொறை.

பாட்டின் முடிவு:

இவ்வாறு கூறிய தோழி இறுதியாகக் கூறி முடிக்கும் சொற்கள் நயமானவை; ''இவ்வியல்புகளை நீயே அறிந்

தொழுகும் நல் இயல்புடையை. அதற்கேற்ப ஒன்று கூறுவேன். என்னுடைய தோழியின் அழகை நுகர்ந்து அவளைத் துறத்தல், இனிய பாலைப் பருகுபவர்கள் பாலையுண்ட பிறகு அதனைக் கொண்டிருக்கும் கலத்தைக் கவிழ்த்து விடுவது போல்வதாகும். ஆதலினால் நின்னிடத்து வருந்தியவள் துயரத்தை நீக்குதல் நின்கடன் ஆகும்; அக்கடனை ஆற்றுதற்கு என்று நீ புரவியைத் தேரிற் பூட்டி உடன் புறப்படுவாயாக.''

இவ்வாறு கவிதை முடிகின்றது. இதன்கண் தரவு, தாழிசை. சுரிதகம் என்ற முப்பாகுபாடுகளில், இனிய முறையில் தோழியின் உட் கருத்துப் புலப்படும்படி கவிஞர் அமைத்துள்ள சீரிய அமைப்பழகு கருதத் தக்கது. இடையே தோழி கூறும் அறப்பொருள் பற்றிய உரைகள் சிந்தித்துணரும் செம்மை உடையவை. பாட்டின் முடிவில் அமைந்த உவமையும் எண்ணி உணரும் பாங்குடையதாக உள்ளது. பயன்கொண்டு கழித்தல் அறத்திற்கு மாறுபட்டது என்ற அருமையான செய்திக்கு உவமை காட்டப்பட்டுள்ளது. நின்னால் களவு ஒழுக்க நெறி தலைப்பட்டுப் பிரிவுத் துயரத்தால் வருந்துகின்றாள் நினக்குரிய தலைவி. அவளது வருத்தத்தைப் போக்கும் கடன் நின் உயிர்க்கடன்; தலையாய கடன் என்று குறிக்கின்றாள் தோழி.

ஒளிநெறி ஒன்பது.

வருத்தமுற்றவர்க்கு உதவுதல் என்பதே முதற்கண் மொழியப்பட்டது. இது பொதுவான நல்லியல்பே ஆயினும் தலைவியின் வருத்தத்தைப் போக்குதல் கடன் என்று குறித்தற்குக் காட்டப்பட்டதாகக் கொள்ளல் பொருந்தும். இவ்வாறே கூடினாரைப் பிரியாமையே போற்றுதல் என்று கூறப்பட்டது. இதுவும் தலைவியைப் பிரியாது வாழும் கற்பு வாழ்க்கைப் பெற்றிமையைப் பெற்றாக வேண்டும் என்ற குறிப்பினதே. உலக வொழுக்கம் அறிதலே பண்பு என்ற அடுத்த நெறிக் குறிப்பு, எல்லோரும் அறியக் கரண வகையான் திருமணம் மேற்கொண்டு வாழ்தல் தக்கது என்று நினைவூட்டு கின்றது. அடுத்து இல்வாழ்வார்க்கு வேண்டிய சுற்றந் தழால், பொறையுடைமை ஆகியவை வற்புறுத்தப்படுகின்றன. கூறிய தொன்றை மறுக்காமல் இருத்தலே செறிவு என்று கூறப் படுவது. தலைவியோடு பிரியாமல் வாழும் பெருந்தகவுடைமையே இது. இறுதியிற் கூறப்படும் இரண்டும் முறை. பொறை இரண்டிற்கும் ஆகிய இலக்கணம். தலைமைப் பேறு கொண்டார்க்குரிய நல்லியல்புகளாக இவ்விரண்டினையும் கருதலாம்

கவிதையின் வடிவம்:

நல்லந்துவனார் படைத்துள்ள இக் கவிதையின் முழு வடிவம் பின்வருமாறு:

''மாமலர் முண்டகந் தில்லையோ டொருங்குடன்
கான லணிந்த உயர்மண லெக்கர்மேல்
சீர்மிகு சிறப்பினோன் மரமுதல் கைசேர்த்த
நீர்பலி கரகம்போல் பழந்தூங்கு முடத்தாழைப்
பூமலர்ந் தவைபோலப் புள்ளல்குந் துறைவகேள்:
ஆற்றுதல் என்பதொன் றலந்தவர்க் குதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை
முறையெனப் படுவது கண்ணோடா துயிர்வௌவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்
ஆங்கதை யறிந்தனி ராயினென் தோழி
நன்னுதல் நலனுண்டு துறத்தல் கொண்க
தீம்பா லுண்பவர் கொள்கலம் வரைதல்
நின்றலை வருந்தியாள் துயரம்
சென்றனை களைமோ பூண்கநின் தேரே'' (கலி - 133)

உட்கோள் யாது?

தாழை மரத்தையும் அதன் பழங்களையும் குறிக்கும்போதே, சீர்மிகு சிறப்புடைய பரம்பொருள் நினைவை உண்டாக்கி, அதன்பின் வாழவேண்டிய இல்லறத்தைக் குறிப்பாற் சுட்டி, அவ்வறவாழ்வாகிய ஒளிநெறிக்கு அடிப்படையாக ஒன்பது விளக்கங்களை உரைத்து, ஆற்ற வேண்டியது திருமணமே என்று முடிக்கின்றது தோழியின் நுட்பமான அறிவு. திருமண வாழ்வு தலைப்பட்டு இல்லற முயலுவதும், அதன்வழி 'சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே' என்ற தொல்காப்பிய நெறி நிற்பதுமே குறிக்கோள் என்று சுட்டிக்காட்டுவதே இவ்வுயர்ந்த கவிதையின் உட்கோள் என்று கூறலாம்.

நச்சினார்க்கினியர் கருத்து மட்டுந் தானா?

''முள்ளுடைய முண்டகமும் கொடிய தில்லையுமே சூழ்ந்த கானலைக் கொடிதாக அவர் கூறுகின்ற மகளிர் சூழ்ந்திருக்கின்ற

தாகவும், உயிர்க் கொலை சூழும் குருகுகள் நன்றாகிய தாழை மலர்போற் றோன்றுகின்றதனை எம்முயிர்க்கு வருத்தம் செய்கின்ற தலைவன் நன்மகனைப்போற் பிறர்க்குத் தோன்றுகின்ற தன்மையாகவும் உள்ளுறை யுவமம் கொள்க'' என்று நச்சினார்க்கினியர் எழுதும் உரைப்பகுதி கருதத் தக்கது. இவ்வாறு உள்ளுறையுவமையை நினைப்பித்தவர் சீர்மிகு சிறப்பினோன் பற்றிய குறிப்பிற்கும், பின்வரும் உயர்ந்த நெறிபற்றிய விளக்கக் குறிப்பிற்கும் சிறப்புரை யேதும் தராதது வியப்பிற்குரியதாகவே தோன்றுகின்றது.

நுண்பொருள் மாட்சி:

தாழைமரம் தென்முகக் கடவுளைப் போலவும், அதன் பழங்கள் அவரது நீர் நிறைந்த குண்டிகை போலவும் தோன்றுகின்ற காட்சியைக் கவிஞர் தாம் விழைந்தவாறு இவ்விடத்துச் சேர்த்துள்ளார். தென்முகக் கடவுள் ஆசிரியக் கோலம் உடையவர். தம் மாணுக்கர்க்கு (சனகர், சனாதனர் முதலிய நான்கு முனிவர் என்பது மரபு) அறமுதற் பொருள்களை விளக்கும் அருந்தவக் கோலம் உடையவராக நூல்கள் கூறும். அவரது நீர்நிறைந்த கரகம் வற்றாது அருள் சுரக்கும் அவரது அருட்டன்மையைச் சுட்டுவதாகக் கொள்ளலாம். கருணைப் பெருக்கும், அறிவுப் பெருக்கும் கொண்ட இறைத் திருக்கோலத்தை இவ்விடம் நினைப்பித்தது ஏன் என்று வினவினால் வரும் விளக்கமே இங்கு நினைக்கத்தக்க ஒட்பம் உடையதாகத் திகழ்கின்றது. தலைவனும் அறிவு உடையவன்; தலைவியின்பால் அன்பு பூண்டவன். ஆதலின் 'சீர்மிகு சிறப்புடைய' தென்முகக்கடவுளை இங்குக் குறித்ததற்கு ஒரு பொருத்தம் உளதாகின்றது. 'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்கநெறி'யைத் தலைவற்குச் சுட்டுவது போல் அடுத்துத் தொடரும் அறவுரைப் பகுதி இருப்பது முன்னும் சுட்டிக் காட்டப்பட்டது. அவற்றைக் கேட்பித்ததும் தலைவன் உள்ளத்து 'அறவாழ்வு தலைப்பட வேண்டும்; அன்பு கனிந்த இல்லற நிலையினை உரிய நெறியில் அடைந்திட வேண்டும்' என்ற உறுதி பிறக்க வேண்டும் என்பதே தோழியின் நுண்ணறிவு நோக்கு. இதற்குத்தக இக் கவிதையைச் சிந்தனைக்கினிய செய்திகளோடு அமைத்த கவிஞனின் 'நுண்மாண் நுழைபுலத்திற்கு' இணையில்லை; ஒளிநெறியாகிய புகழ்மிக்க இல்லற வாழ்வுக் கோட்பாடுகளை எடுத்துரைத்த இக்கலிப்பாடலை ''ஒளிநெறி ஒன்பது'' பாடல் என்று கூறுவது தவறில்லை அன்றோ?

———

சர். ஏ. இராமசாமி முதலியார்

சிறந்த ஆங்கிலப் பேச்சாளரும் அரசியல் அறிஞரும், அரசியலில் பொது நோக்குடையவரும், தமிழர் நலம் நாடி உழைத்த பெருமக்களுள் ஒருவருமான சர். ஏ. இராமசாமி முதலியார் அவர்கள் 1887ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 14 ஆம் நாள் கர்நூலில் பிறந்தார்.



சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் பயின்று பி. ஏ. பட்டமும், பின்னர் பி. எல். பட்டமும்பெற்று 1911ஆம் ஆண்டில் உயர்நீதிமன்ற வழக்கறிஞரானார்.

நீதிக்கட்சி என்னும் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தில் உறுப்பினராகிப் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார். 1920 முதல் 1926 வரை சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தார். 1928, 1930 ஆம் ஆண்டுகளில் சென்னை மாநகராட்சித் தலைவராக இருந்து அரசியல் பணியாற்றினார்.

1930 முதல் 1934 வரை மைய அரசின் மேலவை உறுப்பினராக இருந்தார். 1938 இல் ஆங்கில அரசு இவருக்கு 'சர்' பட்டம் வழங்கிற்று. 1943 முதல் மூன்றாண்டுகள் துணையரையரின் (Vice Roy) ஆட்சிச் செயற் குழு உறுப்பினராக இருந்து திட்டப்பணிகள் ஆற்றினார். 1946 முதல் 1949 வரை மைசூர் திவானாக இருந்தார். 1948 இல் பாதுகாப்பு அவையின் உறுப்பினராகப் பணியாற்றினார்.

நாடு விடுதலை பெற்றபின் மைய அரசின் மாநிலங்கள் அவையில் உறுப்பினராகி 10 ஆண்டுகள் அரசியல் பணியாற்றினார். பின்னர்த் திருவாங்கூர் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராகிச் சிறந்த கல்விப்பணியாற்றினார்.

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம், டர்காம் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம் ஆகிய பல்கலைக் கழகங்கள் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தன.

பிற்காலத்தில் இவர் அரசியலிலிருந்து விலகித் தொழில் துறையிலும் வணிகத் துறையிலும் பெரிதும் ஈடுபாடு கொண்டார்.

இங்ஙனம் பல துறைகளிலும் பணியாற்றிப் புகழ், செல்வம், பட்டறிவு ஆகியவற்றைப் பெற்று வாழ்ந்த இப் பெரியார் 17-7-1976 இல் தமது 89 ஆவது அகவையில் காலமானார். காலஞ்சென்ற டாக்டர் இலக்குமணசாமி முதலியார் இவருக்கு 47 மணித் துளிகள் இளையவர். இருவரும் இரட்டையர் என்றும் புகழுடன் வாழ்ந்து மறைந்தனர்.

———

செய்திகளும் குறிப்புகளும்

செவ்வாய் மண்டிலத்து மலைகள்

செவ்வாய் மண்டிலத்தில் இறங்கி அம்மண்டிலத்தின் இயற்கை அமைப்புகளை அவ்வப்போது படம் பிடித்து இப்பூவுலகிற்கு அனுப்பிக் கொண்டிருக்கும் வைக்கிங்-1 என்னும் கோள் அங்குள்ள மலைகளையும், எரிமலைகளையும், மண்ணின் இயல்புகளையும் படம் பிடித்துக், கடந்த திங்களில் அனுப்பியுள்ளது. அந் நிழற் படங்களினின்று அங்குள்ள மலைகள் இவ்வுலக மலைகளை விட மிகப் பெரியவை என்பதும் அவை பனி மூடிக் கிடக்கின்றன என்பதும், அங்குள்ள எரிமலைகள் ஒவ்வொன்றும் நம் நாட்டு இமய மலையைவிட மும்மடங்கு பெரியவை என்பதும் தெரிய வருகின்றன. இப்போது வைக்கிங்-2ம் செவ்வாய் மண்டிலத்தில் இறங்கியுள்ளது.

பழங்காலச் சிலைகள் கண்டுபிடிப்பு

தஞ்சை மாவட்டம் பாவநாசம் கோட்டத்தில், திருவாவடுதுறை ஆதீனத்தின் கீழுள்ள நல்லூர் கலியாண சுந்தரர் திருக்கோயிலில் ஒரு நிலவறைக் குகைக்குள் வைக்கப்பட்டிருந்த ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள வெண்கலச் சிலைகளும், வழிபாடு செய்யும் தட்டு விளக்குப் போன்ற கலன்களும் அண்மையில் தமிழக அரசின் புதை பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டெடுக்கப்பட்டன.

ஆசிரியர் காண்டேகார் மறைவு

புகழ்பெற்ற மராத்திய புதின ஆசிரியரும் 'ஞானபித்' விருது என்னும் விருதினைப் பெற்றவருமான காண்டேகார் அவர்கள், 2-9-76இல் தமது 79ஆவது அகவையில் காலமானர். திரு. காண்டேகார் 15 சிறந்த புதினங்களைப் படைத்திருக்கிருர். மற்றும் 31 சிறு கதைத் தொகுப்புகளும், 6 தொடர்கதைகளும், 11 கட்டுரைத் தொகுப்புகளும், 15 திறனாய்வு நூல்களும் எழுதியுள்ளார்.

ஆந்திர நாட்டு வரலாறு 10 தொகுதிகளாக வெளிவரும்

இவ்வாண்டு திசம்பர்த் திங்களில் நடைபெற விருக்கும் ஆந்திரப் பல்கலைக் கழகப் பொன் விழாவின்போது, பத்துத் தொகுதிகளாகத் தொகுக்கப்பெற்றுள்ள ஆந்திர நாட்டு வரலாறு வெளியிடப்பெறும் என்று 23-8-76இல் மசூலிப்பட்டினப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. எம். ஆர். அப்பாராவ் கூறியுள்ளார்.

மசூலிப்பட்டினத்தில் ஸ்ரீபத்மாவதி மகில இந்து கலாசாலையின் துவக்க விழாவிற்குத் தலைமை தாங்கிய துணைவேந்தர் திரு. அப்பாராவ் அவர்கள் தமது தலைமையுரையில் இக் கருத்தைத் தெரிவித்தார்.

300 மொழிகளில் விவிலியம்

கிறித்தவ மறையாகிய விவிலியம் 300 மொழிகளில் பெயர்த்தெழுதப்பட்டுள்ளது. அது போலவே ரஷிய புரட்சி வீரராகிய லெனின் எழுதிய நூல்கள் 336 மொழிகளில் வெளிவந்துள்ளன. புகழ்பெற்ற புதின நூலாசிரியை அகாதா கிரிஸ்டின் எழுதிய நூல்கள் 157 மொழிகளில் வெளிவந்துள்ளன. பொதுவுடைமைத் தத்துவத்தை எழுதிய கார்ல்மார்க்சின் நூல்கள் 156 மொழிகளில் வெளிவந்துள்ளன. அறிவியல் துறையில் கற்பனை நூலாசிரியரான ஜூல்ஸ்வெர்ன் எழுதிய நூல்கள் 154 மொழிகளில் வெளிவந்துள்ளன.

தலைமை அமைச்சரின் கவலை

"நம்முடைய பண்பாட்டுப் பெருமையின் சின்னமாகத் திகழும் சமற்கிருதத்தை இறந்துபோன மொழி என்று பலர் கருதுகின்றனர். இது மிக மிக வருந்தத்தக்கது' என்று 10-8 76இல் புது தில்லியில் 'சமற்கிருத நாள்' விழாவினை யொட்டி வழங்கிய செய்தி யொன்றில் நம் இந்திய நாட்டுத் தலைமை அமைச்சர் திருவாட்டி இந்திரா காந்தி அம்மையார் குறிப்பிட்டுள்ளார்.

கண்ணகி திருநாள்

பூம்புகார் பத்தினிக்கோட்ட அறநிலையச் சார்பில் 30—7—76 முதல் 8—8—76 முடிய கண்ணகி திருநாள் கொண்டாடப் பெற்றது. பத்தினிக் கோட்ட அறநிலையக் காப்பாளர் திரு இரா. இராசசேகரன் அவர்கள் செய்திருந்த ஏற்பாட்டின்படி குடந்தை ப. சுந்தரேசனார் அவர்களின் சிலப்பதிகாரத் தொடர் உரையும், திரு. அ. ச. ஞானசம்பந்தன், டாக்டர் வ. சுப. மாணிக்கம் ஆகியோர் தலைமையில் சிலப்பதிகார ஆய்வரங்கமும் நடைபெற்றன. பேராசிரியர்கள் பலர் சிலப்பதிகாரம் பற்றிப் பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினர்.

குழந்தைகள் கலைக் களஞ்சிய வெளியீட்டு விழா

12—8—76 இல் சென்னை மயிலாப்பூர் சீனிவாச சாத்திரி அரங்கில், குழந்தைகள் கலைக்களஞ்சியம் கடைசித் தொகுதியாகிய பத்தாம் தொகுதி வெளியீட்டு விழா தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் தலைமையில் நடை பெற்றது. உயர்நீதி மன்றத்தலைவர் நடுவர் திரு. பி. எஸ். கைலாசம் அவர்கள் நூலை வெளியிட்டார்கள்.

பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கட்கு வரவேற்பு

பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்களின் நீண்ட காலப் பல்கலைக்கழகப் பணியினைப் பாராட்டு முகத்தான் அவர் கட்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மீண்டும் பணியாற்றும் வாய்ப்பளிக்கக் கருதிய செட்டி நாட்டரசர் முத்தைய செட்டியாரவர்கள் பேராசிரியர் அவர்களை அப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு உறுப்பினராக அமர்த்தியுள்ளனர். அமர்வு பெற்ற பேராசிரியர் அவர்கட்கு 2—8—76 இல் அண்ணாமலை நகரில் சிறப்பான வரவேற்பளிக்கப் பெற்றது. மாணவர்களும், பேராசிரியர்களும் இவ் வரவேற்பில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சீறாப் புராணம் கருத்தரங்கு

உமறுப் புலவர் தமிழ்ப் பேரவையின் சார்பில் 15—8—76இல், சென்னைப் புதுக் கல்லூரி ஹாஜி அப்துல் சுக்கூர் மண்டபத்தில் சீறாப் புராணம் பற்றிய ஆராய்ச்சிக் கருத்தரங்கும், இலங்கைப் பேராசிரியர் டாக்டர் உவைஸ் அவர்கட்குப் பாராட்டு விழாவும் மிகச் சிறப்பாக நடைபெற்றன. மௌலவி எம். அப்துல் வகாப் அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினர். பேராசிரியர். க. ப. அறவாணன், திரு. இரா. முத்துக்குமாரசாமி மற்றும் பல அறிஞர்கள் சீறாப் புராணம் பற்றியும் உமறுப் புலவர் பற்றியும் உரையாற்றினர். இவ் விழாவின் தொடர்பாக மலர் ஒன்றும் வெளியிடப் பெற்றது.

கம்பன் விழா

திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் ஆகஸ்டுத் திங்கள் 28, 29ஆம் நாள்களில் கம்பன் விழா நடைபெற்றது. திரு. க. கு. கோதண்டராமன் அவர்கள் தலைமையில் கருத்தரங்கும், திரு. ச. சீனிவாசன் அவர்களை நடுவராகக் கொண்டு வழக்காடு மன்றமும், முன்னாள் நீதிபதி எஸ் மகராஜன் அவர்கள் தலைமையில் பட்டி மண்டபமும் நடைபெற்றன. அறிஞர் பலர் உரையாற்றினர். பேராசிரியர் ரம்போலா மாஸ்கரேனஸ் நன்றியுரை கூறினார்.

செட்டி நாட்டிளவரசர் பிறந்த நாள் விழா

டாக்டர் இராசா சர் முத்தைய செட்டியார் அலுவலர் குழு மன மகிழ் மன்றத்தின் சார்பில் 6—9—76இல், இராஜா அண்ணாமலைபுரம் சிருங்கேரி ஜகத்குரு பிரவசன மந்திரத்தில் குமார ராஜா எம் ஏ. எம். முத்தைய செட்டியார் அவர்களின் பிறந்த நாள் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. சை. வே. சிட்டிபாபு, எம் ஏ. அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார். திருக்குறள் மணி க. த. திருநாவுக்கரசு, எம்.ஏ. அவர்கள் பிறந்த நாள் வாழ்த்துரை வழங்கினர்.

மறைமலையடிகளார் நூற்றாண்டு விழாச் செய்திகள்

8—8—76 இல் புதுவை திருமுடி ந. சேதுராம செட்டியார் அவர்கள் இல்லத்தில், மறை திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் மறைமலையடிகளார் நூற்றாண்டு விழா கொண்டாடப் பெற்றது. அறிஞர்கள் பலர் உரையாற்றினர்.

* * * *

14—8—76 இல் சென்னை ஸ்ரீ நடராஜா கல்விக் கழகத்தின் சார்பில், கழகப் பணிமனையில் அடிகளார் நூற்றாண்டு விழா, கலைமாமணி நாரண துரைக் கண்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அறிஞர்கள் பலர் உரையாற்றினர்.

* * * *

24—8—76 இல் சென்னை ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றத்தில் பேராசிரியர் மறை திருநாவுக் கரசு அவர்கள் தலைமையில் அடிகளார் நூற்றாண்டு விழா கொண்டாடப் பெற்றது. திரு. ந. ரா. முருகவேள், டாக்டர் ஔவை நடராசன் ஆகியோர் உரையாற்றினர்.

* * * *

செப்டம்பர் 2, 3, 4 ஆம் நாள்களில் புன்செய்ப் புளியம் பட்டியில், அடிகளார் மன்றச் சார்பில் மறை திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் இவ் விழாக் கொண்டாடப் பெற்றது. அறிஞர் பலர் உரையாற்றினர்.

பேராசிரியர் மயிலை சிவமுத்து சிலை திறப்பு விழா

22—8—76 இல் மாணவர் மன்றக் கட்டடத் திறப்பு விழாவும், பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்களின் சிலை திறப்பு விழாவும், மன்றத்தலைவர் திரு. கோ. வில்வபதி, செயலாளர் புலவர் தணிகை உலக நாதன் ஆகியோர் படத்திறப்புடன், பாராட்டு விழாவும் நடைபெற்றன. செட்டிநாட்டரசர் இராசா சர் முத்தைய செட்டியார் விழாவிற்குத் தலைமை ஏற்றுச் சிவமுத்து நிலையத்தைத் திறந்து வைத்தனர். சிலம்புச்

செல்வர் ம. பொ. சி. அவர்கள் பேராசிரியரின் சிலையைத் திறந்து வைத்தார். சென்னை உயர்நீதி மன்ற நடுவர் மாண்புமிகு பு. ரா. கோகுல கிருஷ்ணன் விழா மலரை வெளியிட்டார். அறிஞர் பலர் வாழ்த்துரைகளும் பாராட்டுரைகளும் வழங்கினர்.

மதிப்புரை

செந்தில் முருகன் சிரிக்கின்றான்

[ஆசிரியர்: அடியன் மணிவாசகன். வள்ளலார் பொதுநெறி இல்லம். 6, அஞ்சல் நிலையத் தெரு, திருவைகுந்தம், நெல்லை மாவட்டம். கிடைக்குமிடம்: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட். திருநெல்வேலி, சென்னை நிலையங்கள். விலை ரூ. 1-00]

சேவற்கொடியோன் என்னும் முருக பக்தன் ஒருவன் திருச்செந்தூர் முருகனை வணங்கி வழிபடச் செல்கிறான். அவன் ஒரு பாவலன். ஆகையால் செந்தில் முருகன் திருமுன் நின்று உலகியலைப் பற்றிச் சிந்திக்கிறான். முருகனிடமே காரணம் கேட்கிறான். விடை கிடைக்க வில்லை. முட்டிக்கொண்டு சாகத் துணிகிறான். முருகன் தோன்றி அருளொடு சிரிக்கிறான். பாவலன் அச் சிரிப்பைப் பாட்டாகப் பாடுகிறான். இது கதை. இதனைப் பல தலைப்புகளில் மிக அழகான பாக்களால், ஆசிரியர் அடியன் மணிவாசகன் நூலுருவாக்கியுள்ளார். படித்துச் சுவைகாண வேண்டிய நூல்.

நோயின்றி வாழ முடியாதா?

[ஆசிரியர்: புலவர் மூ. இராமகிருட்டினன், அரிமாப் பதிப்பகம், அம்மாப்பேட்டை, சேலம். கிடைக்குமிடம்: சை. சி. நூற்பதிப்புக் கழகம், லிட்., 50/51, மேல மாசி வீதி, மதுரை. கழகத்தின் பிற கிளை நிலையங்களிலும் கிடைக்கும். விலை ரூ 1-25]

மக்கள் நோயற்று வாழவும், வந்த நோய்களை அகற்றவும் சமைக்காத உணவுகளாகிய காய், கனி, கிழங்கு வகைகளே ஏற்றவை என்பது இந்நூலாசிரியர் கருத்து. அம்முறையினைச் செயற்படுத்துவது எப்படி என்பதற்கும் வழி வகைகளைக் கூறுகிறார். உடலுக்குப் பொருந்திய உணவுகளை உண்டுவந்தால் மருந்து என ஒன்று வேண்டா என்னும் திருவள்ளுவர் கருத்தை வலியுறுத்தும் அரிய-சிறிய-பயனுள்ள நூல்.

தமிழினிமை

[ஆசிரியர்: ஐ. கோ. இராமநாதன். கிடைக்குமிடங்கள்: மெர்க்குரி புத்தக நிலையம், கருப்ப கவுண்டர் தெரு, கோயமுத்தூர்-1. மறைமலையடிகள் மன்றம், புன்செய் புளியம் பட்டி, கோவை மாவட்டம். சுண்டபாளையம், அஞ்சல் நிலையம், கோவை-7. விலை ரூ. 3-75]

மறைத்திரு மறைமலையடிகளாரின் நூற்றாண்டு நினைவு மலராக நூலாசிரியரால் வெளியிடப் பட்டுள்ள இந்நூல், தமிழின் இனிமையை 25 தலைப்புகளில் பற்பல சந்தப் பாடல்களால் விளக்குகின்றது.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 2/140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: வ. சுப்பையா.

பிறபதிப்பாளரின் புதிய வெளியீடுகள்

கல்கியின் சிறு கதைக்கலை —டாக்டர் சு. மீனாட்சி முருகரத்தினம்	7	50
புதுமைப்பித்தன் சிறுகதைக்கலை—டாக்டர் டி. முருகரத்தினம்	6	00
ரேடியோ மெக்கானிசம் & ரிப்பேரிங்—வே. கோவிந்தசாமி	18	00
டிரான்சிஸ்டர் மெக்கானிசம் & ரிப்பேரிங்—வே. கோவிந்தசாமி	15	00
டெலிவிஷன் மெக்கானிசம் & ரிப்பேரிங்—வே. கோவிந்தசாமி	20	00
தமிழாய்வு—டாக்டர் ந. சஞ்சீவி	10	00
நெல்லை மாவட்டப் போர்வீரர் வரலாறு	20	00
மும்மணிகள் பொன் மொழிகள் —பண்டித ரத்தின என். ஏ. வேலாயுதம்	2	25
புகழ் மணக்கும் வைணவத் தலங்கள்—சி. முத்துப்பிள்ளை	5	00
கண்ணகி புரட்சி காப்பியம்—பாரதிதாசன்	6	00
மணிமேகலை வெண்பா—பாரதிதாசன்	5	00
தமிழ் நாட்டு வரலாறு (தொல்பழங்காலம்) அரசு வெளியீடு	15	00
திருக்குறள் பொருளகராதி—டாக்டர் மு. கோவிந்தசாமி	8	00
திருக்குறளும் பிற உரையாசிரியர்களும் —டாக்டர் மு. கோவிந்தசாமி	12	00
பாரதியார் கவிதைகள் (கையடக்கப் பதிப்பு)	2	90
அச்சுக்கலை மா. சு. சம்பந்தன்	10	00
வானொலி வழியே—மா. சு. சம்பந்தன்	3	00
நோயின்றி வாழ முடியாதா?—புலவர் மூ. இராமகிருட்டினன்	1	25
ஸ்ரீ கிருஷ்ண அந்தாதி—கண்ணதாசன்	2	25
கடைசி பக்கம்—கண்ணதாசன்	6	00
மு. வ. வின் கடிதங்கள்—ச. விஸ்வநாதன்	2	50
தமிழகத்தில் பிறமொழியினர்—ம. பொ. சி.	10	00
அருள் சுரக்கும் சக்தி ஆலயங்கள்—சி. முத்துப்பிள்ளை	5	00
Voice of Consciousness (Translation of Dr. 'Mu Va's 'Manachchandru') —Miss Meena Krishnaswami	30	00
The Sound of the Snore (Translation of Dr. Mu Va's 'Kurattai Oli') —Miss Meena Krishnaswami	20	00
Tamil-a bird's eye view —Dr. T. P. Meenakshisundaram	30	00
Visnuism and Saivism—J. Gonda	40	00
South India and Sri Lanka—K. K. Pillay	9	00
Kuruntokai—Dr. M. Shanmugam Pillai & David Ludden	80	00

அப்பர் அச்சகம், சென்னை-1.